REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை - ரூபா 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :296 புரட்டாரதி 05 ஆம் நாள் திங்கட்கிழமை 21 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



"ஆர் தியாகி, ஆர் கொலைகாரன் எண்டு சனத்துக்கு நல்லாத் தெரியும் பாருங்கோ..."

## திலீபனை நினைவுகூர்வது எப்படி பயங்கரவாதமாகும்?

### ஜே.ஆர். பொதுமன்னிப்பு வழங்கியது அரசுக்கு தெரியாதா என்று கேள்வி எழுப்புகிறார் சரவணபவன்

யாழ்ப்பாணம், செப். 21
இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு அமைவாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆயுத இயக்கங்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார். அதன் பின்னரே, தியாக தீபம் திலீபன் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சா வழியில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். எனவே திலீபனை நினைவு கூர்வது எப்படிப் பயங்கரவாதமாகும். இவ் 18 ▶

## தடையை நீக்கும் எண்ணத்தில் அரசு?

கொழும்பு, செப். 21
தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது என்று அரசின் உள்ளகத் தகவல்கள் 18 ▶

### தியாக தீபம் திலீபன் நினைவேந்தல்

## தடைக்கு எதிராக நாடாளுமன்றில் கட்சிபேதமின்றி குரல் எழுப்புங்கள்

### தமிழரசு தலைவர் கோரிக்கை



**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 21**
தியாக தீபம் திலீபன் நினைவேந்தலுக்கு ராஜபக்ச அரசு விதித்துள்ள தடைக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் முன்னெடுத்துள்ள நகர்வுகளுக்கும் ஆதரவு தெரிவித்துள்ள அனைத்துத் தரப்புக்களுக்கும் பெரும் நன்றிகளைக் கூறுகின்றோம். ராஜபக்ச அரசு விதித்துள்ள தடைக்கு எதிராக நாளை ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுக்கவேண்டும். 18 ▶

## திலீபன் கொலைகாரராம்

### இப்படிச் சொல்பவர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப். 21
திலீபன் கொலைகளில் ஈடுபட்டவன். அவனுக்குத் தியாகிப் பட்டம் வேறு கொடுக்க வேண்டுமா? இந்த கொலைகாரர்களை எதற்கு நினைவுகூர வேண்டும் என்று, ராஜபக்ச அரசின் தடைகளுக்கு ஆதரவாகக் 18 ▶

## கண்டி நிலநடுக்கமும் காரணமாயிருக்கலாம்!

### பேராசிரியர் அதுல

கண்டி, செப். 21
கண்டியில் ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தமைக்கு, கண்டியில் அண்மைய நாள்களில் ஏற்பட்ட நில 19 ▶

## கடற்றொழிலுக்கு சென்றவரை காணவில்லை

முல்லைத்தீவு, செப். 21
முல்லைத்தீவு - இரணைப்பாலை பகுதியைச்சேர்ந்த மீனவர்கள் இருவர் கடலுக்கு சென்ற நிலையில் ஒருவரை இதுவரை 18 ▶

## தமிழ்க் கட்சிகளின் திடீர் ஒற்றுமை தமிழின வரலாற்றில் ஒரு மைல்கல்

### அஸாத் ஸாலி பெருமிதம்

கொழும்பு, செப். 21
கொள்கைகளாலும் கோட்பாடுகளாலும் வேறுபாடுகள் காணப்பட்ட நிலையிலும், தமிழினத்தின் விடிவுக்காகவும் நியாயத் துக்காகவும் ஒரேதளத்தில் நின்று, ஜனநாயக 19 ▶



## கண்டியில் பேரனர்த்தம்



## ஒன்றரை மாதப் பச்சிளங்குழந்தை உள்ளிட்ட மூவர் நசியுண்டு சாவு

### 5மாடிக் கட்டடம் தாழிறங்கியதால் இடர் ஏற்பட்டதாக அறிவிப்பு

கண்டி, செப். 21
கண்டி பூவெலிகட பகுதியில் நேற்று அதிகாலை 5 மணி யளவில் நிலம் தாழிறங்கி யமையால் ஐந்து மாடிக் கட்டடம் மண்ணில் தாழிறங்கியதால் பேரிடர் ஏற்பட்டது. அந்தக் கட்டடம் சரிந்து வீழ்ந்ததில் அதன் அருகிலிருந்த வீடுகளும் சேதமடைந்தன. இந்தச் சம்பவத்தில் ஒன்றரை மாதப் பச்சிளங் 19 ▶

## ஒழுக்காற்று விசாரணைக்கு மணிவண்ணன் தயாராம்!!!

### கஜேந்திரகுமார், கஜேந்திரன் மீதும் குற்றச்சாட்டுக்கள்

யாழ்ப்பாணம், செப். 21
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழுவால் தீர்மானிக்கப்பட்டதற்கு அமையதன்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளித்து கடிதம் அனுப்பியுள்ள வி.மணிவண்ணன், கட்சியால் முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று விசாரணைக்கு ஒத்துழைப்பேன் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அத்தோடு 16 ▶

# மொறட்டுவவில் மருத்துவ பீடம்

*அடுத்தாண்டு அமையும்*




கொழும்பு, செப்.21
நாட்டின் பல்கலைக்கழக முறைமையை விரிவுபடுத்தும் வகையில், மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடமொன்று அடுத்த ஆண்டு உருவாக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
இந்தப் புதிய மருத்துவபீடத்தில் 70 மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். ருகுண பல்கலைக்கழகம், கொத்தலாவ பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என்பவற்றின் துணை வேந்தர்கள் இதற்கான கற்றல்சார் உதவிகளை வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். ஆரம்ப கட்டமாக நாகொட போதனா வைத்தியாலை மாணவர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது என்றார். (ப)

# குழுநிலைவிவாதத்தில் 20 இன் பரிந்துரைகள்?

*பிரதமர் அறிவிப்பு*

கொழும்பு, செப். 21
உத்தேச 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு திருத்தங்களை முன்வைப்பது சம்பந்தமாக தான் நியமித்த குழுவின் பரிந்துரைகள், நாடாளுமன்றக் குழு நிலை விவாதத்தின் போது முன்வைக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட முன்னர், குழு நிலை விவாதத்தின் போது, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எந்தக் கட்சியும் தமது திருத்தங்களை முன்வைக்க முடியும். இது புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க முன்னர் சமர்ப்பிக்கப்படும் இடைக்காலத் திருத்தச் சட்டம். எதிர்காலத்தில் விரிவாகக் கலந்துரையாடி தேவையான திருத்தங்களுடன் புதிய அரசமைப்புச் சட்டம் கட்டாயம் கொண்டு வரப்படும். ஜனநாயகத்தை மதித்து, மக்களின் நிலைப்பாடுகளுக்குச் செவிகொடுத்து, சரியான முறையில் செயற்பட வேண்டும் என்பது எமது அரசாங்கத்தின் கொள்கை. குறைபாடுகள் இருப்பின் சுட்டிக்காட்டுவதற்கு நாட்டு மக்களுக்குக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது என்றார்.
(ப-இ)


# ஹரினின் சாட்சியத்தை கொழும்பு பேராயர் மறுப்பு

கொழும்பு, செப்.21
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியமளித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அளித்த அறிக்கையை பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மறுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது;
ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஹரின் பெர்னாண்டோ அளித்த அறிக்கை கொழும்பு பேராயர் உட்பட முழு மதகுருக்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தாக்குதல் நடந்த நாளில் ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை காலை ஒரு பொதுத் தேவாலயத்தில் பேராயர் திருப்பலி ஒப்புக்கொடுக்கவில்லையென்பதைத் தெரிவித்திருந்த ஹரின் பெர்னாண்டோ, வரவிருக்கும் ஆபத்துக் குறித்து பேராயரும் அறிந்திருப்பார் என்று ஊகிப்பதாகத் தெரிவித்திருந்தார். அவருடைய அந்த அறிக்கை தவறானது. பேராயருக்கு எதிரான நியாயமற்ற தகவல்கள் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றுள்ளது. (ப-இ)


# குஞ்சுப் பரந்தனில் கஞ்சா வேட்டை

## சிக்கியது 77 கிலோ கஞ்சா

**கிளிநொச்சி செப்.21**
**கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்ட கஞ்சா வேட்டையில், கிளிநொச்சி, குஞ்சுப் பரந்தனில் இருந்து 77. 380 கிலோகிராம் கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது.**





கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் பிரதம தலைமைப் பொலிஸ்பரிசோதகரின் விசேட அணியினரால் அந்தக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி குஞ்சுப் பரந்தன் கடற்கரைப் பகுதிக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் பொலிஸார் கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளனர். கஞ்சா கடத்தல்காரர்களால், படகு மூலம் குஞ்சுபரந்தன் கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் பொலிஸாரின் வருகையை எப்படியோ அறிந்துகொண்ட கடத்தல்காரர்கள், கஞ்சாவைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.
கஞ்சா கடத்தப் பயன்படுத்தப்பட்ட படகு, மற்றும் இஞ்சின் போன்றவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ப-6)

# 20ஐ சவாலுக்கு உட்படுத்தினால் தீர்ப்புக்கான காலம் 21 நாள்களே

*நாடாளுமன்றச் செயலாளர் நாயக அலுவலகம் அறிவிப்பு*

கொழும்பு, செப்.21
அரசமைப்பின்20ஆவது திருத்தம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதனைச் சவாலுக்குட்படுத்தி யாரேனும் உயர்நீதிமன்றத்தை நாடினால் நீதிமன்றம் 21 நாள்களுக்குள் அது தொடர்பான தீர்ப்பைத் தெரிவிக்கவேண்டும் என நாடாளுமன்றச் செயலாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.
நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை 20ஆவது திருத்தம் தொடர்பாக எந்த முன்னெடுப்பையும் நாடாளுமன்றத்துக்குள் மேற்கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.
அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நாளை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அதன்பின்னர் இடம்பெறவிருக்கும் சம்பிரதாய வழிமுறை தொடர்பாக தெளிவுபடுத்தும் அறிக்கையை நாடாளுமன்றச் செயலாளர் நாயக அலுவலகம் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் உள்ளாவது: "அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்த பின்னர், அதன் அரசமைப்புக்கு முரணான தன்மையைச் சவாலுக்குட்படுத்தி ஏழு நாள்களுக்குள் எந்தவொரு பிரஜைக்கும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கின்றது.
அவ்வாறு யாரும் சவாலுக்குட்படுத்தாவிட்டால் 20ஆவது திருத்தம் ஏழு நாள்களுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் இறுதியில் வாக்கெடுப்பு இடம் பெறுவதுடன் அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து செயற்குழுவில் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தில் இருக்கும் அனைத்துச் சரத்துக்களையும் ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்ப்பதுடன் இதன்போது ஏதாவது திருத்தங்களைப் பிரேரிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. தொடர்ந்து சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பு இடம்பெறும். மூன்றாவது வாசிப்பு மீதான விவாதத்தின் இறுதியில் வாக்கெடுப்பு இடம் பெறும். இதன்போதும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அது நிறைவேற்றப்படவேண்டும். இதன்போது சட்டமூலம் அரசமைப்பாக அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இறுதியாகச் சட்டமூலத்தில் சபாநாயகர் கைச்சாத்திட்டதுடன் அது சட்டமாக்கப்படுகின்றது என்றுள்ளது. (ப-இ)

*போதைக்கு அடிமையான*

# சிறுவர்களுடன் பாலியலில் ஈடுபட்டார் என பெண் கைது

கொழும்பு, செப்.21
இளம் வயது ஆண் பிள்ளைகளைக் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள் பழக்கத்திற்கு உள்ளாக்கி, அவர்களுடன் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தம்புள்ளை நவ பாதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த திருமணமான இளம் பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். தம்புள்ளை தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் எஸ்.பி.எதிரிசிங்கவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம், மோசடித் தடுப்புப் பிரிவின் பொலிஸார் இணைந்து நவ பாதெனிய பிரதேசத்தில் வீடொன்றைச் சோதனையிட்டபோதே அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். அந்தப் பெண் இரண்டாவது கணவனையும் கைவிட்டு, 15 முதல் 17 வயதான ஆண் பிள்ளைகளை போதைப்பொருளுக்கு அடிமையாக்கி, பாலியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வந்துள்ளதாகப் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்தப் பெண் கைது செய்யப்பட்டதை அடுத்து தம்புள்ளைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற நவ பாதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த பெற்றோர், பிரதேசத்தில் வசிக்கும் 15 வயது முதல் 16 வயதான பத்துச் சிறுவர்களுடன் அந்தப் பெண் பழகி வந்துள்ளதுடன் அவர்களைப் போதைப்பொருளுக்கு அடிமையாக்கியுள்ளதாகக் கூறியுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள பெண்ணுக்கு எதிராக போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தொடரவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் (ப-இ)

# போரின் மூலம் தீர்வை அடைவதே புலிகளின் நோக்கமாக இருந்தது

## சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கருத்து

**கொழும்பு, செப்.21**

**பேச்சு நடத்தி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கான தேவை விடுதலைப் புலிகளுக்கு இருக்கவில்லை எனவும் போரின் மூலமே தீர்வைக்காண முயன்றதாகவும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி பாலித கோஹன தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகளுடனான மூன்று சுற்றுப் பேச்சுக்களில் அரசாங்கத்தின் சார்பில் பாலித கோஹன 2006ஆம் ஆண்டில் கலந்துகொண்டிருந்தார். ஜெனீவாவில் நடைபெற்ற இரண்டு பேச்சுக்கள், மற்றும் நோர்வேயின் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சிலும், பாலித கோஹன பங்கேற்றிருந்தார். இந்தப் பேச்சுக்கள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

அந்தக் காலத்தில் ஒருநாடாக, ஒரு அரசாங்கமாகப் பேச்சுக்களின் ஊடாகப்போரை முடிப்பதற்கு நாங்கள் பாரிய முயற்சிகளைச் செய்திருந்தோம். ஆனால், நாங்கள் மேற்கொண்ட அந்த அனைத்து முயற்சிகளையும் விடுதலைப் புலிகள் அமைப்பு நிராகரித்தது. ஒரு சில சமயங்களில் ஜெனிவாவுக்குச் சென்று பேச்சு நடத்தினோம். அங்கு இரண்டு சந்தர்ப்பங்களிலும் பேச்சுக்களிலிருந்து புலிகள் அமைப்பே எழுந்து சென்றது. மூன்றாவது சுற்றுப் பேச்சு நோர்வேயின் ஒஸ்லோ நகரில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. நானும் எனது குழுவும் அங்கு சென்றிருந்தோம். அப்போது புலிகள் மேசைக்கு வரவில்லை. எனக்கு அந்த நிகழ்வு இன்னும் ஞாபகம் இருக்கிறது. பேச்சுக்குத் தயாராகுவதற்கான அறைக்குக் கூட புலிகளின் பிரதிநிதிகள் வரவில்லை. எனவே, சமாதானத்தின் ஊடாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புலிகளுக்கு எந்தத் தேவையும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. அவர்களின் விருப்பமும் நோக்கமும் போரின் ஊடாகப் பிரச்சினையைத் தீர்ப்பதாகவே காணப்பட்டது. போர் செய்யாமல் சமாதானத்தை அடையக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை புலிகள் அமைப்பு இல்லாது செய்துவிட்டதே என்ற கவலை எனக்கிருக்கிறது. எந்தவொரு நபருமே போருக்குச் செல்வதற்கு விரும்பமாட்டார். அது அவர்களின் முதலாவது நோக்கமாக இருக்காது. போர் செய்யாமல் பிரச்சினையைத் தீர்ப்பதே எமது முதன்மை நோக்கமாக இருக்கும்.

ஆனால், அன்று புலிகளுக்கு போர் செய்து வெற்றிபெறும் நோக்கமே காணப்பட்டது என்றார்..

(ப-இ)

# ஹேமசிறி பெர்னாண்டோ வழங்கிய சாட்சியம் பொய்

## மைத்திரி அறிக்கை



கொழும்பு, செப்.21

ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்று பதவி விலகினால், பல சலுகைகளை வழங்குவதாகத் தான் ஒருபோதும் தெரிவிக்கவில்லை என்றும் அந்தக் குற்றச்சாட்டை நிராகரிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர்தாக்குதல் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் கடந்த வாரம் முன்னிலையாகிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறிபெர்னாண்டோ குறித்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவித்திருந்தார். அதில் கடந்த வருடம் ஏப்ரல் 24 ஆம் திகதி அன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு பதவியில் இருந்து விலகினால் சலுகைகளை வழங்குவதாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தார் எனக் கூறியிருந்தார். இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். அத்தோடு தனக்கு வாய்ப்புக் கிடைத்தால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகி இந்த விடயம் குறித்துச் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(ப-க)

# 13ஆவது திருத்தம் நீக்கப்படமாட்டாது

## அமைச்சர் பிரசன்னரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.21

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஒருபோதும் நீக்கப்படமாட்டாது எனத் தெரிவித்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மாகாண சபைகள் ஊடாக அரச சேவைகள் முறையாக இடம்பெறும் என்றும் கூறினார். மாகாண சபைகள் ஊடாக அரச சேவைகள் முறையாக இடம் பெறுகிறது. ஒரு சில மாகாண சபைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன அவை திருத்தம் செய்யப்பட்டு மாகாண சபைகளும் சிறந்த முறையில் செயற்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ப-இ)



# உயர் கல்வி; கட்டாயபாடம்

உயர்கல்வியை கட்டாய பாடமாக்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று கல்வி சீர்திருத்தத்துக்கான இராஜாங்க அமைச்சின் செயலர் எம். உபாலி சேதர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;ஆரோக்கியமான பிரஜைகள் எனும் கருப்பொருளின் கீழ் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை காரணமாக, 25 சதவீதமான மாணவர்கள் அதிக உடல், நீரிழிவு, இதய நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார அமைப்புக் கண்டறிந்துள்ளது. தரம் 6 தொடக்கம் பாடசாலையை விட்டு விலகும் காலம்வரை இந்தப் பாடம் கட்டாயமாக்கப்படவுள்ளது. சாதாரணதரம் மற்றும் உயர்தரங்களில் மேலதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில், இந்தப் பாடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் பாடசாலையின் சுகாதார முறைமை முன்னேற்றப்படும் என்றார்.

(ப)

# மறவன்புலவில் மக்கள் மயப்பட்ட அலுவலகம்

கொடிகாமம், செப். 21

சீலக்ஸ் காற்றாலை நிறுவனத்தின் உதவியோடு அமைக்கப்பட்ட மறவன்புலவு கமக்கார அமைப்பு அலுவலகமும் அதனோடு இணைந்த உரக் களஞ்சியமும் மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணிக்கு மறவன்புலோ கமக்கார அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்மந்தர் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், யாழ்ப்பாணம் கமநல திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஆர்.நிசாந்தன் மற்றும் உதவி ஆணையாளர் திருமதி பி.தெய்வநாயகி, கைதடி கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் கே.கோகுலன், சீலக்ஸ் காற்றாலை நிறுவனத்தின் உயரதிகாரிகளான நிர்வாக இயக்குநர் ஜெயந்த கமகே, பணிப்பாளர் சமீர கனேகொட, ஆலோசகர் எஸ்.சிறீதரன் மற்றும் திட்ட முகாமையாளர் பி.ஜேம்ஸ்ரவி, சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் தங்கவேலு, சாவகச்சேரி பொலிஸ் அதிகாரிகள், அரச அதிகாரிகள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ப-159,9)

# விவசாயத்துக்கு முன்னுரிமை

## இதுவே அரசின் நோக்கம் என்கிறார் அங்கஜன் எம்.பி

கொடிகாமம், செப். 21

விவசாயிகளின் குடும்பங்களும் அவர்களது சமூகங்களும் நாட்டின் முன்னேற்றகரமான நிலைக்கு வரவேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்று யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

மறவன்புலவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

சென்ற வாரம் வருகை தந்த கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே "சுபீட்சத்தின் நோக்கில் கமத்தொழில் மறுமலர்ச்சி" திட்டத்தின் ஊடாகப் பல விவசாய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கப் போவதாக் கூறியிருந்தார். அவர் வருகை தந்து சென்ற சொற்ப தினங்களுக்குள்ளேயே இம்முறை பெரும்போக நெற்செய்கைக்கு வரையறையற்ற அளவு உரம் இலவசமாக கமநல சேவை நிலையங்களின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு மேட்டு நிலப் பயிர்களுக்கு மானிய அடிப்படையில் ரூபாய் 1500 க்கு தேவையான அளவு உரம் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவித்துள்ளார். இவை விவசாயப் பெருமக்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதங்கள் ஆகும் என்றார்.

(ப-159)

# கிராம மட்ட பகுப்பாய்வு

சாவகச்சேரி செப் 21

சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுகளுக்கான பகுப்பாய்வு இன்றும், நாளையும் கோவிற்குடியிருப்பு லிகோரியார் கடற்றொழிலாளர் சங்கக் கட்டடத்தில் இடம்பெற உள்ளது.

பிரிவில் உள்ள சமூக மட்ட அமைப்புக்கள், பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பிரிவு கிராம அலுவலர்கள் அறிவித்துள்ளனர்.

(ப-9)



# மன்னகண்டல் மாணவர்களுக்கு மாலை வகுப்புக்கள் ஆரம்பம்!

முல்லைத்தீவு, செப். 21

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மன்னகண்டல் கிராமத்தில் பாடசாலை மாணவர்களுக்கான மாலைநேர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்வி பொருளாதார அமைப்பின் அனுசரணை மூலம் இந்த மாலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வருடத்தின் முற்பகுதியில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதாக இருந்தது. எனினும் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக அது பிற்போடப்பட்டுவந்த நிலையில், கடந்த 14ஆம் திகதி இந்த மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கிராம அலுவலர், கிராமத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், வித்தியானந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவலிங்கம், மாலைநேரக் கல்விக்குழுவின் செயலாளர் அ.பிரபாகரன், கிராம பொது அமைப்புகளின் தலைவர், ஆசிரியர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-222)

# சாவகச்சேரி நகர் பகுதியில் அண்மைக்காலமாக திருட்டு

*உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொலிஸாருக்கு மக்கள் வலியுறுத்தல்*

சாவகச்சேரி நகர்ப்புறப் பகுதியில் அண்மைக் காலமாக அடிக்கடி இடம் பெற்று வரும் திருட்டுக்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். தாம் இதுவரை மேற்கொண்ட முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர். சாவகச்சேரி கண்டுவில் இரண்டாம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றின் வேலி மதிலில் பொருத்தப்பட்டிருந்த 35 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக் கதவு நேற்றுமுன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது. இதே காணியில் கடந்த மாதம் மின்மோட்டார் ஒன்றும் திருட்டு போயுள்ளது. மின்மோட்டார் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கும் இன்னும் சில முறைப்பாடுகளுக்கும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காதமையாலேயே இவ்வாறான திருட்டுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-9)

# இளநீர் பிடுங்கியவர் மின்சாரம் தாக்கி சாவு

தென்னை மரத்தில் ஏறி, இளநீர் குலையைப் பறிக்க முயன்றவர், எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஏறாவூர் மக்காமடி, ஆதம்லெப்பை குறுக்கு வீதியைச் சேர்ந்த தாவூத் சலீம் முஹம்மது றிபான் (வயது 19) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். இவர் இளநீர் பறித்து விற்பனை செய்யும் தொழிலைச் செய்து வந்துள்ளார். குருநாகல் இப்பாகமுவப் பிரதேசத்தில் உள்ள தென்னந்தோப்புக்களிலுள்ள தென்னை மரங்களில் ஏறி இளநீர்க் குலையைப் பறித்துக் கொண்டிருக்கும் போது, எதிர்பாராத விதமாக அவரை மின்சாரம் தாக்கியுள்ளது.

உதவிக்கு விரைந்தவர்கள் மின்சாரம் தாக்கிய இளைஞனை, மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எனினும் அவரது உயிர் பிரிந்துவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (க-இ)

# சட்டவிரோதமான கடற்றொழிலை கட்டுப்படுத்த என்ன செய்தீர்கள்!

## கடற்படையை நோக்கி ரவிகரன் கேள்வி

முல்லைத்தீவு, செப். 21

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை உரிய முறையில் கட்டுப்படுத்த, கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களமோ, அல்லது கடற்படையோ உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அதேவேளை தேசிய மீனவர் இயக்கம், முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கும், காணிவிடுவிப்பு விடயங்களுக்கும் உரிய தீர்வுகளைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்க மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மீனவ மக்கள் சட்டங்களை உரியமுறையில் நிலைநாட்டுங்கள் என்றே சொல்கின்றனர். அதாவது சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை நிறுத்துவதை நடமுறைப்படுத்துமாறே கேட்கின்றனர். இங்கு பெரிய அளவில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அந்த விடயத்தைக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இங்கே வெளிப்படுத்துங்கள். சமாளித்து இங்கு இடம்பெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளை மூடி மறைக்க வேண்டாம்.

சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைச் செய்கின்ற சங்கங்களையோ, சங்க நிர்வாகிகளையோ, கடல் தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் ஏன் தடுக்க முடியாதுள்ளது?. குறிப்பாக வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிக்கும் முறை தற்போது பல நூறு படகுகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் தொழிலைக் கட்டுப்படுத்துவதில் கடற்படையினர் பக்கச் சார்பாக நடந்துகொள்கின்றனர். குறிப்பாக எமக்கும் எமது மீனவர்களுக்கும் எதிராகவே கடற்படையினர் செயற்படுகின்றனர். கடல்பரப்பு கடற்படையினரின் ஆளுகைக்குட்பட்டது எனில், கடலில் இடம்பெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளை அவர்கள்தானே கட்டுப்படுத்தவேண்டும்.



அவ்வாறு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினாலும், கடற்படையினராலும் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனில், எமது மக்களிடம் அந்த விடயத்தை ஒப்படையுங்கள். கடற்படை மற்றும் நீரியல் வளத் திணைக்களம் எமது மக்களுக்கு பாதுகாப்பளித்தால் போதும். எமது மக்கள் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்குரிய செயற்பாடுகளைச் செய்வார்கள்.

அதேவேளை மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் குறித்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கெதிராக மிக விரைவாக, நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள காணிப்பிரச்சினைகள், கடற்றொழில் பிரச்சினைகள் என்பவற்றை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் உரிய இடத்துக்கு கொண்டுசெல்லவேண்டும். எமது பிரச்சினைகளில் ஒரு பிரச்சினைக்காவது, மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினால் தீர்வு பெற்றுத்தர முடியுமாக இருந்தால் உங்களுடைய தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு எமது ஆதரவை நல்குவோம்- என்றார். (ம-246)

# மத்தியஸ்தர் சபையின் செயற்பாடு இடமாற்றம்

*தவிசாளர் சிவானந்தன் தெரிவிப்பு*

மன்னார், செப். 21

கடந்த காலங்களில் மன்னார் சமூக மத்தியஸ்தர் சபை இயங்கி வந்த இடம் தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டுள்ளதாக அதன் தவிசாளர் எம்.சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

ஒன்பது வருடங்களாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மண்டபத்தில் இயங்கி வந்த குறித்த மத்தியஸ்தர் சபை, தற்போது தற்காலிகமாக இடம்மாற்றப்பட்டுள்ளது. இதன்படி மன்னார் பெரியகடை சன சமூக நிலைய கட்டடத்தில் கடந்த வாரம் முதல் பிரதி ஞாயிறுகளில் இது இயங்குகின்றது என்று தவிசாளர் சிவானந்தன் மேலும் தெரிவித்தார். (ம-60)

# தனிமைப்படுத்தல் காலம் முடிந்த 47 பேர் வீடுகளுக்கு

கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 47 பேர், தங்களது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து நேற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இது வரை 43 ஆயிரத்து 612 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்துள்ளனர். தற்போது 5 ஆயிரத்து 922 பேர் முப்படையினரால் பராமரிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)



# பேசாலையில் மறைக்கல்வி வாரம்

மன்னார், செப். 21

மறைக்கல்வி வாரத் திருவிழாத் திருப்பலி மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் நேற்று ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக (13.09.2020 - 20.09.2020) மறைக்கல்வி வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இதை முன்னிட்டு மறைக்கல்வி சம்பந்தமாக பல பங்குகளில் அன்பிய வட்டாரங்களில் பல்வேறுபட்ட போட்டிகளும் மாணவர்களுக்கு நடத்தப்பட்டன. நிறைவு நாளான நேற்று மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பேசாலை பங்குத் தந்தையான அருட்பணி எஸ். கொடுத்தோர் தேவராஜா அடிகளார் தலைமையில் அருட்பணி றஞ்சித் சேவியர் அடிகளார் மற்றும் அருட்பணி ஜொலிமன் அடிகளார் ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். (ம-60)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒன்றுபடுதல் உணர்த்தும் பாடம்

கடந்த சில நாள்களுக்கு முன்னர் "திலீபன் ஒரு பயங்கரவாதி" எனக் கூச்சலிட்ட கோத்தாபய அரசு , சடுதியாகத் தன்னுடைய சுருதியை மாற்றியுள்ளது. "திலீபனின் நினைவேந்தலுக்கு அரசு தடை விதிக்கவில்லை. அங்குள்ள நீதிமன்றங்கள்தான் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்குத் தடையுத்தரவை விதித்துள்ளன" – என்று தெரிவித்துள்ளார் அரசின் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

தியாக தீபம் திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த காலமான இந்தக்காலப் பகுதியில் அவரின் நினைவேந்தலைக் கடைப்பிடிக்கத் தமிழர் தாயகம் பேரெழுச்சியுடன் தயாராகி வந்தது. இதற்கு ஆரம்பம் முதலே பல்வேறு இடையூறுகளை விதித்துவந்த பொலிஸார் கொரோனாப் பெருந்தொற்றையும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டங்களையும்காரணம்காட்டி நினைவேந்தல்களை நடத்த முடியாத அளவுக்கு நீதிமன்றத் தடையுத்தரவுகளையும் பெற்றுள்ளனர். இந்தத் தடையுத்தரவை முறைப்படி கையாண்டு நினைவுதினத்தை கடைப்பிடிக்க தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் திரண்டு , முழுமூச்சில் காரியத்தில் இறங்கியுள்ளன.

தமிழர் தாயகத்தில் இடம்பெறும் நினைவேந்தல்களுக்கு சிங்கள அரசுகள் முட்டுக்கட்டைபோடுவது இதுவொன்றும் முதல்முறை அல்ல. இதற்கு முதலும் பல தடவைகள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் முரண்பட்டு சிதறிக் கிடக்கும் நிலையில், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தடைகள் மூலம் அஞ்சலிப்புக்களையும் நினைவு தினங்களையும் கச்சிதமாகத் தடுத்துவந்தது பேரினவாத அரசு. ஆனால் இம்முறை அரசே எதிர்பாராத மிகப்பெரும் பாய்ச்சல் ஒன்றை தமிழ்த் தேசியக் கட்சிகள் மேற்கொண்டுள்ளன. தமக்குள் இருந்த பேதங்களை மறந்து ஓரணியில் திரண்டு நினைவேந்தலைக் கடைப்பிடிக்க அனுமதி கேட்டுக் கோரிக்கை விடுத்தமையும், அனுமதி கிடைக்கப்பெறாத பட்சத்தில் போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளமையும் கோத்தாபய அரசு எதிர்பாராத நகர்வுகளே. இதனால் தான் தன்னுடைய பிடிவாதத்தைத் தளர்த்தி, நினைவேந்தலை நடத்த அனுமதிப்பதென அரச உயர்மட்டம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது. இது தமிழ்த் தேசியத்தின் பாதையில் பயணித்த கட்சிகள், இப்போது ஓரணியாகத் திரண்டுள்ளமைக்கு கிடைத்த முதல் வெற்றியாகும்.

தேர்தல் காலத்தில் கட்சிகள், வாக்குகள், கொள்கைகள் என்று அடித்துக்கொண்டாலும் தேர்தல் முடிவடைந்து பொதுவாழ்வு என்ற நீரோட்டத்துக்குள் வருகின்றபோது இவ்வாறான பிரிவுகளை தமிழ்த் தேசியக் கட்சிகள் களைந்து செயற்பட்டால் எவ்வளவு பெரிய நன்மை கிட்டும் என்பதையும் பார்த்தீபனின் பசி இன்று உணர்த்தியுள்ளது.

ஒரு கட்சி அல்லது ஓரிரு கட்சிகள் கோரிக்கை விடுத்து அது செவிமெடுக்கப்படாத பட்சத்தில் வெறும் கண்டன அறிக்கையோடு இந்த விடயம் முடிந்துபோயிருக்கும். மாறாக அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நின்றதால்தான் இது தமிழர்களின் குரலாக இங்கு இலங்கையெங்கும் ஒலித்துள்ளது. இலங்கையில் மட்டுமல்ல இலங்கைக்கு வெளியேயும் இந்தக் கூட்டுக்குரல் சர்வதேசத்தின் கதவுகளையும் தட்ட ஆரம்பித்துள்ளது. இதுதான் 'நினைவேந்தலைக் கடைப்பிடிக்க முடியாது' என்று உடும்புப் பிடியாக இருந்த கோத்தாபய தரப்பினர் இன்று 'நினைவேந்தலுக்கு அரசு தடை விதிக்கவில்லை. அங்குள்ள நீதிமன்றங்கள்தான் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்குத் தடையுத்தரவை விதித்துள்ளன' என்று தாளத்தை மாற்றிப் பாடுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. அரசின் தூண்டுதல் இல்லாமல் ,நீதிமன்றங்கள்தான் தடைகளை விதித்துள்ளன என்றால் உரிய நிபந்தனைகள் மூலம் அஞ்சலிப்புக்களையும் நினைவேந்தலையும் மேற்கொள்ள துறைசார் நிபுணர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எது எப்படியோ பல படிப்பினைகளைத் தந்த பார்த்தீபனின் பசி இன்று இன்னொரு படிப்பினையையும் எம் முன் கட்டவிழ்க்கின்றது. அதுதான் ஒற்றுமை. இது அனைவருக்கும் உறைக்கட்டும்.

# புதிய அரசமைப்பே நாட்டுக்குத் தேவை!

## வலியுறுத்துகிறது அஸ்கிரிய பீடம்

கொழும்பு, செப். 21

**அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தில் காணப்படுகின்ற சில விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசுக்குள்ளும் இது தொடர்பில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனவே முழுமையான புதிய அரசமைப் பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இவ்வாறு தெரிவித்தார், அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்க மெதகம ஸ்ரீ தம்மானந்த தேரர்.**

ஜே. ஆர். ஜயவர்தனவினுடைய ஆட்சிக் காலத்தைப் போன்று நிறைவேற்றதிகாரத்தை மையப்படுத்தியதாகவே 20 ஆவது திருத்தம் அமைந்துள்ளது. மீண்டும் தனி நபரொருவருக்கு சகல அதிகாரங்களையும் வழங்கும் யோசனையை ஏற்றுக் கொள்கின்றீர்களா என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

20 ஆவது திருத்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் பிரதமரால் மீளாய்வு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவால் முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை ஆராய்ந்து புதிய வர்த்தமானியை வெளியிடுவதாக அரசின் ஒருதரப்பு கூறுகிறது. 20 இல் எவ்வித திருத்தங்களையும் மேற்கொள்ளப் போவதில்லை. தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலே நாடாளுமன்றிலும் சமர்ப்பிக்கப்படும் என்று பிறிதொரு தரப்புக் கூறுகிறது.

இரட்டைக் குடியுரிமையுடைய ஒருவர் நாடாளுமன்றுக்கு தெரிவாகலாம் என்பது நடைமுறைக்கு வந்தால், நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலாகும். எனவே 20 ஐ உருவாக்கியவர்களே அதில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அல்லது பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகளை ஏற்று புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டும். ஆட்சி மாறும் போது அரசமைப்பில் திருத்தங்களைச் செய்து கொண்டிருப்பதைவிட முழுமையான புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் -என்பதே எமது நிலைப்பாடாகும். ஆளுந்தரப்பில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் இறுதியில் நாடாளுமன்றில் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே தீர்மானத்தையே எடுப்பார்கள்.

வேறுபட்ட கருத்துக்களை கூறினாலும் கட்சித் தலைமைத்துவத்தின் தீர்மானத்துக்கு ஏனையோர் தலையசைக்கும் கலாசாரமே இலங்கை அரசியலில் பின்பற்றப்பட்டு வருகிறது, என்றார். (கு-இ)

## பல்கலை மாணவர் 'லப்ரொப்' பெற கடன்

கொழும்பு. செப். 21

பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களுக்கு மடிக்கணினியை (லப்ரொப்) கொள்வனவு செய்வதற்குத் தேவையான கடன் வசதியை பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. அரச வங்கிகளுடன் இணைந்து இந்த கடன் வசதியை பெற்றுக்கொடுக்கவுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபா சலுகை கடன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு கடன் வழங்கப்படவுள்ளது. பட்டப்படிப்பை நிறைவு செய்ததன் பின்னர் கடனை மீளச் செலுத்துவதற்கு முடியும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு 'ஒன்லைன்' கல்வி முறையை தொடர்வதற்காகவும், இந்த வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளன. 2019 கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு தொழில்நுட்ப கல்வி மற்றும் ஆங்கில பாடநெறிகள் 'ஒன்லைன்' ஊடாக கற்பிக்கப்படவுள்ளமை குறிப்பித்தக்கது. (து)

## எம்.பி.களுக்கு விரைவில் 'ரப்'



கொழும்பு. செப். 21

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 'ரப்' வழங்கப்படவுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களும் எழுத்து மூலமாக இதுவரை வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் வீண் பணச்செலவு ஏற்படுவதோடு நேரமும் வீண் விரயமாகின்றது. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேசையில் இத்தகைய ஆவணங்கள் குவிக்கப்பட்டுள்ளமையால் அவர்களின் ஏனைய நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு 'ரப்' வழங்குவதன் மூலமாக நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குப்பத்திரம் தொடர்பிலான அனைத்து தகவல்களையும் இதனூடாக வழங்க முடியும் என்று சபாநாயகர் தெரிவித்தார். (கு-இ)

## வாகனங்களின் விலை சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு,செப். 21

வாகனங்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என்று வாகன இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. வாகன இறக்குமதி இலங்கையில் நிறுத்தப்பட்டுள்ளமை மற்றும் வாகனங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளமையே இந்த விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரின்ஜிகே தெரிவித்துள்ளார். அதற்கமைய, ஓர் இலட்சத்திலிருந்து 5 இலட்சம் வரை வாகனங்களின் விலை அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

# சமாதான உறுதிப்பாடுகளுக்கு இலங்கைக்கு முழு ஒத்துழைப்பு

## அமெரிக்கா தெரிவிப்பு

**கொழும்பு, செப்.21**

**ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து விலகியிருந்தாலும் கூட நீடித்த சமாதான உறுதிப்பாடுகளுக்கு உதவுவதற்கு இலங்கை அரசுடன் முழுமையான தொடர்பில் இருக்கின்றோம் என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின்மத்தியமற்றும்தெற்காசியபொது இராஜதந்திரவிவகாரங்களுக்கான பிரதி செயலர் ஹெனிக் ஜொனதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லிணக்கத்தையும் பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுப்பட்டோருக்கான பொறுப்புக்கூறலையும் ஊக்குவிக்கும் விடயத்திலும் ஒத்துழைப்புடன் உள்ளோம்.

ஏனெனில் ஜனநாயக ஆட்சி , மனித உரிமைகளுக்கான மதிப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சி உள்ளிட்ட விடயதானங்களை இலக்காகக் கொண்ட முயற்சிகளுக்கு ஒத்துழைத்தல் என்பதன் அடிப்படையிலேயே இலங்கையுடனான எமது பாதுகாப்பு உறவை முகாமைத்துவம் செய்கிறோம்.

மறுபுறம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகியிருந்தாலும் கூட, நீடித்த சமாதானம் மற்றும் நல்லிணக்க உறுதிப்பாடுகளுக்கு உதவுவதற்கு இலங்கை அரசுடன் முழுமையான தொடர்பில் இருக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அலுவலகத்தின் ஆற்றலையும் செயற்பாடுகளையும் பலப்படுத்தல் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் போன்ற ஏனைய நல்லிணக்கப் பொறிமுறைகளை உருவாக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புகளை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது. புதிய அரசுடனும் அந்த ஒத்துழைப்பு தொடர்வதை வரவேற்க வேண்டும்- என்றார். (எ-இ)

# வீதி ஒழுங்கு நடைமுறை இன்று முதல் கட்டாயம்

கொழும்பு,செப்.21

மேல் மாகாணத்தில் வீதி ஒழுங்கு நடைமுறை இன்று முதல் கடுமையாக நடைமுறைபடுத்தப்படும் என்று போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி முதல், வீதி ஒழுங்கு நடைமுறை ஒத்திகை கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையில், அதைக் கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதி ஒழுங்கு நடைமுறைகளை மீறும் வகையில் செயற்படும் சாரதிகளைத் தெளிவுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பஸ் முன்னுரிமை தடத்தில் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்குக் கூடுதல் இடம் வழங்கப்படும்.

அதற்கமைவாக 4 மருங்குகளைக் கொண்ட வீதியின் வலது புறத்தில் உள்ள முதலாம் மற்றும் இரண்டாம் ஒழுங்கைகள் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் பயணிக்க ஒதுக்கப்பட்டுள்ளது.

3 மருங்குகளைக் கொண்ட வீதியின் வலது புறத்தில் உள்ள முதலாம் ஒழுங்கை பஸ்கள் பயணிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதில் இரண்டாம் ஒழுங்கை வாகனங்களை முந்திச்செல்லப் பயன்படுத்த முடியும்.

வாகன நெரிசல் அதிகம் காணப்படும் இடங்களில், அதாவது ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, பேஸ் லயின் வீதி, ஹய்லெவல் வீதி மற்றும் காலி வீதி ஆகியவற்றில் வீதி ஒழுங்கு நடைமுறை பின்பற்றப்படவுள்ளது.

கடற்படையினரின் ட்ரோன் கமராக்கள் மற்றும் சி.சி.ரி.விகமராக்கள்மூலம் வீதி ஒழுங்கு நடைமுறைகள் கண்காணிக்கப்படவுள்ளன. (க-இ)

# 20ஆவது திருத்தத்தில் மாற்றம் ஏற்படலாம்!

## சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, செப்.21

20ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும், தற்போது உள்ளவாறே அதை நிறைவேற்ற வேண்டும் என்று ஆளும் கட்சிக்குள் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நீதியமைச்சர் உருவாக்கிய சட்டத் திருத்த வரைவே நாடாளுமன்றத்தில் அவரால் சமர்பிக்கப்பட உள்ளது. அதை மாற்றம் செய்யாது நிறைவேற்றுவது என்று எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இரட்டை குடியுரிமை என்ற போர்வையில் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நபர்கள் நாடாளுமன்றத்திற்குள் வரலாம் என்ற சில சந்தேகங்களும் உள்ளன. அமைச்சுப் பதவிகளை எதிர்ப்பார்த்துள்ளவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க அரசமைப்புத் திருத்தத்தை அரசு மேற்கொள்ள முயற்சித்தால் அது தவறு. அரசைச் சரியான வழிக்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்பது எமது பொறுப்பு. என்றார். (எ-இ)

# இலங்கை தூதரகம் மூடப்பட்டது

கொழும்பு,செப்.21

சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை துணைத் தூதரகம் மூடப்பட்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# மண்சரிவு அச்சத்தால் 180 பேர் இடம்பெயர்வு

மத்திய மாகாணத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்யும் கடும் மழை காரணமாக, மஸ்கெலியா, காட்மோர் தனியார் தோட்டத்தின் கல்கந்த பிரிவைச் சேர்ந்த 44 குடும்பங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக இந்த நிலைமை தொடர்கின்றது. மழை காலங்களில் எம்மை அங்கிருந்து வேறு இடங்களுக்குச் செல்லுமாறு கூறுகின்றனர். ஆனால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைத் தருகிறார்கள் இல்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

44 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தோட்ட நிர்வாகத்துடன் கலந்தாலோசித்து, அம்பகமுவ பிரதேச செயலகத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் அவர்களுக்கு உலர் உணவு வழங்கப்படும் என்று அந்தப் பகுதி கிராம அலுவலர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ரயிலுடன் லொறி மோதி இளைஞர் ஒருவர் காயம்

கொழும்பு, செப்.21

பரிசோதனைக்காகப் பயன்படுத்தப்படும் ரயில் இயந்திரத்துடன் லொறி ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. அதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் புத்தளம், ரத்மல்யாய பிரதேசத்தில் நேற்று நடைபெற்றது.

லொறியின் சாரதியான 29 வயதுடைய இளைஞர் ஒருவரே காயமடைந்துள்ளார். புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பரிசோதனை ரயில் இயந்திரத்துடனே சிறிய ரக லொறி விபத்துக்குள்ளானது.

லொறி பகுதியளவில் சேதமடைந்துள்ளது. காயமடைந்த இளைஞரை அங்கிருந்தவர்கள் உடனடியாகப் புத்தளம் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகப் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

# நந்திக்கடலை ஆழப்படுத்த அங்கீகாரம் கிடைத்துள்ளது

முல்லைத்தீவு, செப். 21

முல்லைத்தீவு நந்திக்கடல் களப்பினை ஆழப்படுத்துவதற்கு, முதற்கட்ட அங்கீகாரம் கிடைத்துள்ளதாக மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் மோகனகுமார் தெரிவித்துள்ளார்.

நந்திக்கடல் களப்பினை ஆழப்படுத்துவது தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலகம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவை நந்திக்கடல் களப்பை ஆழப்படுத்துவது தொடர்பில் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறித்த நந்திக்கடல் ஆழப்படுத்துதல் என்ற விடயத்தில் முதற்கட்டமாகவட்டுவாகல்பாலம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளை சுத்தப்படுத்துவதற்கான அங்கீகாரங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட இருக்கின்றன. மிக விரைவில் நந்திக்கடலினை ஆழப்படுத்துவதற்குரிய வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றார். (ம-246)



# எரிந்த வீட்டுக்கு உதவி

கிளிநொச்சி, செப். 21

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் தனித்து வாழ்ந்துவரும் வயோதிபப் பெண்ணொருவரின் வீடு தீக்கிரையான நிலையில் அவருக்கு உடனடி உதவிகள் சில செய்யப்பட்டுள்ளன.

போரில் ஒரு மகனை இழந்தும், மற்றுமோர் பிள்ளை காணாமலாக்கப்பட்ட நிலையிலும் குறித்த வயோதிபப் பெண் தனித்து வாழ்ந்து வருகின்றார். அவரது வீடு அண்மையில் தீயில் எரிந்துள்ளது.

இதையடுத்து புலம்பெயர் தேசத்தில் வாழும் கஜீபன் கண்ணதாசன் என்பவரின் நிதியுதவியில் அந்தப் பெண்ணுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-222)

# மக்களின் பிரச்சினைகளில் அரசுக்கு அக்கறையில்லை!

## செல்வம் எம்.பி. சாடுகின்றார்



வவுனியா, செப்.21

அரசு 20ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கின்றது. ஆனால் மக்களின் பிரச்சினைகளை அரசு கவனத்தில் கொள்வதாக இல்லை. வன்னி மாவட்டத்தில் மக்கள் பெரும் பிரச்சினைகளைச் சந்தித்தவண்ணமுள்ளனர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கு, மல்லாவி ஆகிய இடங்களில் நடத்திய மக்கள் சந்திப்புக்களில் தாம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தற்போது படையினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. அதேபோன்று பொலிஸாரின் தலையீடுகளும் அதிகரித்துள்ளன. தியாகி திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கப்பட்ட பின்னர் இந்தத் தலையீடுகள் மேலும் அதிகரித்துள்ளன.

வன இலாகாத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றால் தமிழ் மக்களின் நிலங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அதைப் போன்று கடற்றொழிலிலும் அந்நியர்களின் அத்துமீறல்கள் காணப்படுகின்றன.

அரசு பெற்றுக் கொண்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எமது மக்களை நசுக்குவதற்குப் பயன்படுத்தக் கூடாது. என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்ததாவது:

தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து முடிவுவெடுத்து அஞ்சலி செலுத்துகின்ற உரிமையைப் பறிக்கக்கூடாது என்று ஆட்சியாளர்களுக்கு கடிதம் மூலம் எழுதி அனுப்பியுள்ளார்கள். கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து நாங்கள் ஒற்றுமைப்பட்டுள்ளோம். இந்த ஒற்றுமை தொடரவேண்டும். தேர்தலுக்காக மட்டும் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்கின்றன அல்லது ஒற்றுமைப் படுகின்றன என்ற நிலை மாற்றம் பெறவேண்டும்-என்றார். (ஏ-19)

# வவு. பஸ் சங்கத்துக்கு மீண்டும் அதே தலைவர்

வவுனியா,செப்.21

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவராக கடந்த 22 ஆண்டுகளாக ரி.கே. இராஜேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டு வந்துள்ளார்.

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 22 ஆவது பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. வவுனியாவில் உள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் சங்கத்தின் கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பாகவும், பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. புதிய தலைவராக ரி.கே. இராஜேஸ்வரன் இம்முறையும் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக கே.சிவஞானமூர்த்தியும் பொருளாளராக ரசீனும், உப தலைவராக எம்.விஜயரட்ணமும் ,உப செயலாளராக சஞ்சீவலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களுடன் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 10 பேரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். பொதுக்கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமாகிய கு.திலீபன் மற்றும் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், வர்த்தகசங்க உறுப்பினர்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (110)





ஈழத்து சீரடி சாய் என அழைக்கப்படும் நல்லூர் நாவலர் வீதி மடர்த்தார்பதி சீரடி சாய் ஆலயத்தின் மகோற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை காலை தேர்த் திருவிழாவும், 1ஆம் திகதி வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ந)

# அதிரடிப் படையினரால் ஒருவர் கைது

முள்ளியவளை, செப்.21

முள்ளியவளை பகுதியில் நேற்றைய தினம் நபர் ஒருவரைக் கைதுசெய்த சிறப்பு அதிரடிப்படையினர் அவரை முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.



முள்ளியவளை மாமூலை பகுதியில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி வந்துள்ள ஒரு குழுவைச் சேர்ந்த இருவர் ஏற்கனவே சிறப்பு அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் தற்போது மூன்றாவது நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-19)

# ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையை வழங்க வேண்டும்

## அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவிப்பு



கொடிகாமம், செப்.21

தற்கால மாணவ மாணவிகளே எதிர்காலத்தின் தலைவர்கள். எமது இளம் சமுதாயம் நல்லதொரு சமுதாயமாக மாறவேண்டுமானால் ஆசிரியர் சமூகம் அர்ப்பணிப்பான சேவையை ஆற்றவேண்டும் என யாழ். மாவட்டச் செயலரும் அரசாங்க அதிபருமான க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யா.கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் இப்போது அபாயகரமான நிலையில் இருக்கிறோம். யாழ் குடாநாட்டை பொறுத்தவரையில் 13 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வளத்தைப்பெற்று இருக்கிறோம். இருந்த போதும் எமது கல்வியிலே இறுதி நிலை மாவட்ட மட்டத்தை எடுத்தால் கடந்த 20, 30 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலைமையை விட சற்று பின்னடைவில் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதற்கு நாங்கள் அனைவரும் பொறுப்பை ஏற்று அந்த நிலைமையைச் சீர்திருத்த பாடுபட வேண்டும்.

நாம் இப்போது சிதறிய சமுதாயமாக போய்விட்டோம். எதிர்கால சமூகத்தினரை வழிப்படுத்த வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கிறது. பல்வேறு சவால்கள் எங்களை அறியாமல் எங்கள் மத்தியில் ஆழமாக பரவியுள்ளன. எமது இளம் சமுதாயம் நல்லதொரு சமுதாயமாக மாறவேண்டுமானால் ஆசிரியர் சமூகம் அர்ப்பணிப்பான சேவையை ஆற்ற வேண்டும். பெற்றோரும் தங்களுடைய குழந்தைகளுக்கு நல்ல வழிகாட்ட வேண்டும். சமூகமும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

தொழிற்சந்தையிலே பலதரப்பட்ட தொழில்கள் இருக்கிறன. ஆனால் பட்டதாரிகள் எதிர்பார்ப்பது அரச உத்தியோகத்தை மட்டும் தான். வேலையில்லா பிரச்சனை 4 வீதமாக இலங்கையில் காணப்படுகிறது. எமது எதிர்கால சமூகம் இவற்றையெல்லாம் எதிர்கொள்ள வேண்டுமாக இருந்தால் அவர்களுக்கு நல்ல சரியான தொழில் வழிகாட்டல் சிறப்பாக இருக்க வேண்டும் என்றார். (ந-159)

# மரக்குற்றிகள் கடத்திய வாகனம் மடக்கிப்பிடிப்பு

கிளிநொச்சி,செப்.21

அனுமதிப்பத்திரம் இன்றி விறகுக்குள் மறைத்து வேப்பமரக் குற்றிகளைக் கடத்திச் சென்ற வாகனம், பளை பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, வாகனத்தை மறித்து சோதனையிட்டபோது மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. விறகுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 15 வேப்பமரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. அதனைக் கடத்தி சென்ற நபர் வாகனத்துடன் கைது செய்யப்பட்டார்.

வாகனமும் சான்றுபொருள்களும் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணையின் பின்னர், கிளிநொச்சி நீதிவான் மன்றில் சந்தேகநபரை முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (க-6)





# கொரோனாவை கண்டறிய மாணவனால் புதிய கருவி

கொழும்பு, செப்.21
கொரோனா தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கு, கொழும்பு மருத்துவ பீட மாணவன் டில்ஷான் அபே சிங்கவால் சி.பி.ஆர். கருவி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
இந்தக் கருவியை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்றது. சுகாதாரத் துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு புதிய கண்டுபிடிப்பாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே இந்தக் கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.
இதயத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒரு சிகிச்சையாக சி.பி.ஆர். கருவியைப் பெற்றுக் கொடுப்பதற்கான இயந்திர அமைப்பும் இதன்மூலம் அறிமுகப்படுத் தப்படும்.
மருத்துவ பீட மாணவனின் இந்த புதிய உருவாக்கத்துக்கு இதுவரை புதிய கண்டுபிடிப்பாளர்களின் சங்கம், தேசிய ஔடத ஒழுங்குமுறை அதிகாரசபை, இலங்கை வைத்திய சங்கம் ஆகியன அனுமதி வழங்கியுள்ளன.
இந்தக் கருவியை எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அறிமுகப்படுத்துவது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளது. (ர-இ)

# 20 யாருடையது? 20 யாருக்கு?

கொழும்பு, செப்.21
"20 யாருடையது? 20 யாருக்கு?" என்ற தொனிப் பொருளின்கீழ் 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக மக்களை தெளிவுபடுத்தும் செயற்பாடுகளை மக்கள் விடுதலை முன்னணி முன்னெடுக்கவுள்ளது.
அதன் ஆரம்பக் கட்டமாக எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பு பொது நூலகத்தில் முதலாவது சம்மேளனம் இடம்பெறவுள்ளது.
இது தொடர்பில் அந்தக் கட்சியின் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்ததாவது
20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பாதகம் தொடர்பாக பொது மக்களுக்கு தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக வெவ்வேறு பிரதேசங்களில் சம்மேளனங்களை ஏற்பாடு செய்துள்ளோம். இதன் ஆரம்ப நடவடிக்கையாக எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு பொது நூலகத்தில் முதலாவது சம்மேளனம் இடம்பெறவுள்ளது.
அரசமைப்பின் மூலமாக மாத்திரம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க முடியாது.
அரசமைப்பு என்பது அதிகாரத்துக்காகவும், மேலதிக அதிகாரங்களுக்காகவும் மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது. 18, 19 மற்றும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆகிய எந்த திருத்தமுமே மக்களின் பிரச்சினைக்கு உண்மையான தீர்வாக அமையும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளமை முற்றிலும் தவறாகும். அது ஏகாதிபத்தியத்துக்கு வழியமைத்துக் கொடுக்கும். இதனையே நாம் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதியுடைய அதிகாரங்களை குறைப்பது மாத்திரமல்ல, நிறைவேற்றதிகார முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். என்றார். (எ-இ)

# காணி அபகரிப்பால் மக்கள் போராட்டம்

**வவுனியா, செப். 21**
**பொதுமக்களுக்குச் சேரவேண்டிய 20 ஏக்கருக்கும் மேற்பட்ட காணியை மன்னாரைச் சேர்ந்த ஒருவர் உரிமை கோருவதைக் கண்டித்தும், அந்தக் காணியைத் தமக்கு பெற்றுத்தருமாறு கோரியும், வவுனியா மாணிக்கர் இலுப்பைக்குளம் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் குதித்தனர்.**



போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:
"வவுனியாவில் பொதுக்காணி ஒன்றை காணியற்ற குடும்பங்கள் துப்புரவுசெய்து வேலிஅடைத்திருந்த நிலையில், அதைத் தமது காணி என்றும் அதற்கான பத்திரம் தன்னிடம் இருப்பதாகவும் கூறி மன்னாரைச் சேர்ந்த நபர் எங்களை அச்சுறுத்துகின்றார்.
இது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டால், பொலிஸாருடன் வந்து எம்மை அச்சுறுத்துகின்றார். நாங்கள் அடைத்த காணி வேலியையும் பிடுங்கி எறிந்துள்ளார். இத்தகைய செயற்பாடுகளை ஏற்க முடியாது. எமக்கு உரிய தீர்வை வழங்க வேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை முன் வைத்தனர்.
குறித்த பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் இந்த விடயம் தொடர்பாக பிரதேச செயலருடன் கலந்துரையாடி தீர்வு வழங்குவதாக உறுதியளித்தார். அதனையடுத்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்துசென்றனர். (த-110)

# மனைவி தீ வைத்தாரா?

## கணவன் சிகிச்சையில்

முல்லைத்தீவு, செப். 21
எரிகாயங்களுடன் குடும்பத்தலைவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கணவனின் தொல்லை தாங்கமுடியாததால் மனைவியே கணவன் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்று ஆரம்ப விசாரணையைக் கொண்டு பொலிஸார் தெரிவித்தனர். குடும்பத்தில் கணவன் மனைவிக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தது. கணவன் வெளியிடத்தில் வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று தனது பிள்ளைகளைப் பார்க்க மனைவியின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.
அதன்போது ஏற்பட்ட தர்க்கத்தின்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இது குறித்து மேலதிக விசாரணை தொடர்வதாகவும் முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர். (த-19)

# மோட்டார் குண்டுகள் கிணற்றிலிருந்து மீட்பு



வவுனியா, செப். 21
வவுனியா, கட்டையர்குளம் மதியாமடு பகுதியில் கிணற்றிலிருந்து பெருமளவான வெடிபொருள்களை புளியங்குளம் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். தனியார் காணியிலுள்ள கிணற்றை அதன் உரிமையாளர் துப்புரவு செய்துள்ளார். அதன்போது கிணற்றில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இருப்பதை அவர் அவதானித்தார். அது பற்றி புளியங்குளம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்திருந்தார்.
சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கிணற்றிலிருந்து 8 மோட்டார் குண்டுகளை மீட்டனர். கிணற்றில் மேலும் வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளதால், நீதிமன்ற அனுமதியுடன் கிணற்றில் தேடுதல் நடத்தப்படவுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-110)

# 10 பெண் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்கு

பதுளை, செப்.21
பதுளை, ஹப்புத்தளைப் பகுதியில், பத்து பெண் தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் மதியம், குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.
ஹப்புத்தளைப் பகுதியின் பெருந்தோட்டப் பிரிவில், தேயிலைக் கொழுந்து கொய்து கொண்டிருந்த நிலையிலேயே இவர்கள் இந்தக் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
குளவிக் கொட்டுக்கு இலக்கானவர்கள், ஹப்புத்தளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் ஆறு பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை, மரமொன்றிலிருந்து குளவிக்கூடு கலைந்து இவர்களைத் தாக்கியுள்ளது. உடனடியாக அத் தொழிலாளர்கள், தோட்ட நிர்வாகத்தின் வாகனமொன்று மூலம் கூட்டிச் செல்லப்பட்டு ஹப் புத்தளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ர-இ)

# முதன்முறையாக இலத்திரனியல் குடும்ப விவர அட்டை அறிமுகம்

கிளிநொச்சி,செப்.21

**இலங்கையில் முதல் முதலாக இலத்திரனியல் வடிவ குடும்ப விவர அட்டை கண்டாவளை பிரதேச செயலகத்தால் அறிமுகம் செய்யப்பட்டது.**

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்றது. கண்டாவளை பிரதேச செயலாளரின் முயற்சியில் அப்பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த இலத்திரனியல் குடும்ப அட்டை உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக ஒரு குடும்பத்தின் சகல விவரங்களும் இலத்திரனியல் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொதுமகன் ஒருவர் பிரதேச செயலகத்தின் கீழ் சேவையை பெற்றுக் கொள்வதற்கு இலகுபடுத்தலாக இந்த இலத்திரனியல் குடும்ப அட்டை பயன்தரவுள்ளதாக கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

அதனடிப்படையில் கடந்த சனிக்கிழமை முதல் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மக்கள் தமது குடும்ப விவரங்களை இலத்திரனியல் இலகுபடுத்தலின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். இலத்திரனியல் குடும்ப அட்டையை கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் அறிமுகம் செய்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர், 57 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் டி ஜி எஸ் செனெரத் யபோ, கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் கே.சிறிமோகன், மற்றும் 571 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் டி கே எஸ் கே டொலகே, 572 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் டி எம் பி பி தசநாயக, கரைச்சி, பூநகரி பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-6,222)



# சட்டவிரோத மீன்பிடியில் கடற்றொழில் சமாச தலைவர்

## மீனவர்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, செப்.21

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில், சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது கலந்துரையாடலில் கலந்து கொண்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர், தான் தனது மீனவர் சங்கத்தின் முடிவின் அடிப்படையிலேயே குறித்த வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

சமாசத் தலைவரின் இந்தக் கருத்தை முற்றாக மறுத்த மீனவர்கள், ஒரு சமாசத் தலைவராக அனைத்துச் சங்கங்களுக்கும் தலைவராக இருக்கின்ற அவர் கட்டாயமாக சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக சமாசத் தலைவரே சட்டவிரோத வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிக்கும் தொழிலைச் செய்தால் இந்த சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது யார் எனக் கேள்வி எழுப்பினார்.

இதன்போது சமாசத் தலைவர் மற்றும் மீனவர்க ளுக்கிடையில் வாய்த்தர்க்கம் வலுத்ததுடன், கலந்துரையாடலில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ந-246)

# விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி,செப் .21

பளைப் பிரதேச மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் விபத்தில் சிக்கி காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து மிருசுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. கடமை முடிந்து வீடு திரும்புகையில் மிருசுவில் பகுதியில் வீதியோரத் தில் ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்த வேளையில் அவ்வழியே வந்த வாகனம் அவர் மோதியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-9)





# திருக்குடும்ப கன்னியர் சபையின் 200ஆவது ஆண்டு நிறைவு

மன்னார்,செப்.21

போர்டோவின் திருக்குடும்ப கன்னியர் சபையின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவும்; விசேட திருப்பலி நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னார் மடுத் திருத்தலத்தில் நடைபெற்றன.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்று அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜ் , திருக்குடும்ப சபையின் துணைக் குருக்களான அருட்தந்தை நிக்கலஸ்,அருட்தந்தை ரஞ்சித் அன்றனி ஆகியோர் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக இரு மொழிகளி லும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாணம் மற்றும் தென் மாகாணத்தை சேர்ந்த திருக் குடும்பத்தவர்கள் முறையே அப்போஸ்தலிக்க அருட் சகோதரிகள், தியான யோக சகோதரிகள், திருமட சார்பற்ற சகோதரிகள் ,பொது நிலையினர், திருக் குடும்ப இளைஞர்கள், சிறுவர்கள் ஆகியோர் பங்கேற்றதுடன் விசேட நடைபவனியும் இடம்பெற்றது. (ஐ-56)



வவுனியா புளியங்குளம் இந்துக்கல்லூரி வலைப்பந்தாட்ட அணியினருக்கு புரட்சி விளையாட்டுக் கழக அணியினரின் பங்களிப்புடன் சீருடைகள் வழங்கப்பட்டன. தொழில்நுட்ப உத்தியோகத்தரும் விளையாட்டு வீரருமான மோசிபவன் அதனை வழங்கினார். (ப- 402)

# டெங்கு நோய் விழிப்புணர்வு

கொடிகாமம்,செப்.21

டெங்கு அற்ற பாடசாலை என்ற தொனிப்பொருளில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

கல்லூரி அதிபர் கி.விக்னராஜா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி பொதுச் சுகாதார பரிசோதகர் வி.ஜங்கரன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். (ஐ-159)



# மணல் கொள்ளையர்கள் கண்டாவளையில் அட்டகாசம்

கண்டாவளை, செப்.21

கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியிலுள்ள வயல் நிலங்களில் மணல் கொள்ளையர்களால் மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளது என தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெரும்போக பயிர்செய்கைக்கு ஆயத்தமாக வயல் நிலங்கள் பண்படுத்தப்பட்டு, பயிர்செய்கைக்கு தயார்செய்யப்பட்டுள்ள நிலையில் மணல் கொள்ளையர்களால் வயல் நிலத்தில் சுமார் 5 அடி தாழ்வுவரை மணல் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த வயல் நிலத்தை பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இப் பகுதிகளில் தொடர்ச்சியாக இவ்வாறான மணல் அகழ்வு நடைபெற்று வருவதனால், எதிர்வரும் காலங்களில் விவசாயச்செய்கை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை வெளியிட்டனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரியநடவடிக்கை எடுப்பார்களா? எனவும் கேள்வி யெழுப்பியுள்ளனர். முறைப்பாட்டைத் தொடர்ந்து, குறித்த பகுதியை பொலிஸார் சென்று பார்வையிட்டுள்ளனர். (ந-316)

# காலபோக கூட்டம்

சாவகச்சேரி,செப்.21

சாவகச்சேரி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட 2020 /2021 ஆண்டு நெற் செய்கைக்கான காலபோகக் கூட்டங்கள் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் நடைபெற்று வருகின்றன. இந்த வரிசையில், ஜே/339 வரணி வடக்கு பிரிவுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வரணி வடக்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ-159)

# இன்றைய நாள்

**மேடம்:** மேலதிகாரியை அனுசரித்து சென்றால் அமைதி கூடும். தொழிலில் புதிய கூட்டாளிகள் இணைந்து கொள்வர். மனதில் பரபரப்பு ஏற்படும் நாள். முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**இடபம்:**பணியாளர்கள் கடமையை நிறைவேற்றி மகிழ்வர். கனவுகள் நனவாகும். கெட்டவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். ஆனந்தமான நாள். நண்பர்களின் ஆதரவு உண்டு.

**மிதுனம்**நிம்மதியடையும் நாள். கலைத் துறையினருக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். குழப்பத்தில் இருந்த இளைஞர்கள் புதிய பாதையைக் காண்பீர்கள்.

**கடகம்:** சம்பாதிக்கும் எண்ணம் உருவாகும் நாள். கற்றவர்களின் பாராட்டுக்களால் கனிவு கூடும். வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும். தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். நண்பர்கள் மீது நம்பிக்கை குறைய வேண்டாம். அக்கம் பக்கத்தி னரிடம் பக்குவமாகப் பேசினால் நன்மை அடையலாம்.

**கன்னி:** பணி ஈடுபாடு அதிகரிக்கும் நாள். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வியாபா ரத்தில் உள்ள தடை நீங்கி லாபம் கூடும். தள்ளிப்போன சுபநிகழ்ச்சி நடைபெற ஏற்பாடாகும்.

**துலாம்:** மனக்குழப்பம் அகலும் நாள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். கலைத்துறையில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெண்கள் கௌரவத்துற்கு முக்கியத்துவம் கொடுப்பர்.

**விருச்சிகம்:** பகை மாறும் நாள். தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். கணவர் நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. புதிய பணி கருதி எடுத்த முயற்சி கைகூடும்.

**தனுசு:**காத்திருந்த நல்ல விஷயம் நடைபெறும் நாள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். கலைத்துறையினருக்கு வரவு திருப்தி தரும்.

**மகரம்:** வியாபாரிகள் முயற்சி செய்து வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள். பணியாளர் சற்றும் எதிர்பாராத சலுகைகள் கிடைக்கலாம். முயற்சியில் வெற்றி கிடைக்கும் நாள்.

**கும்பம்** வியாபாரிகள் சமாளிக்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வீர்கள் அரசியல்வாதிகளுக்கு நன்மை உண்டு.

**மீனம்:** மனக்குழப்பம் அடையும் நாள். தந்தைக்கு மருத்துவ செலவுகள் ஏற்படும். பணியாளர்கள் வாக்குவாதம் செய்ய வேண்டாம். யாருடைய குடும்ப விஷயத்திலும் தலையிட வேண்டாம்.

# தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியில்

ரெலோ மாவட்ட இணைப்பாளர் புவனேஸ்வரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, செப்.21

தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்ததால் தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது என வடமாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ கட்சியின் மாவட்ட இணைப்பாளருமான ஆ.புவனேஸ்வன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, மல்லாவி, மாந்தை கிழக்கு பிரதேசங்களில் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்.

கூட்டமைப்பு சார்பாக வன்னியில் ரெலோ கட்சியில் இரண்டு பிரதிநிதிகளை நாடாளுமன்றம் அனுப்பியமைக்கு நன்றிகள். கடந்த தேர்தலில் ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அது விரைவில் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். மக்கள் விரும்புகின்ற குரலாக அவர்கள் தொடர்ந்து ஒலிப்பார்கள். மக்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பயணிக்க வேண்டும்.

கடந்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசியக் கட்சிகளுக்கு கணிசமான வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் இன்று இராணுவ ஆட்சியை நிலைநாட்ட எல்லா இடமும் படையினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளீர்கள். அவர்களும் நாடாளுமன்றத்தில் தமிழர்களை அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்க்கின்ற வேலையையே தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றார்கள்.

இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகும். எனவே தமிழ் மக்கள் இதில் சற்று விழிப்படைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-19)

## சிறைக்கைதிகளிடமிருந்து சிம்கள், கைபேசி மீட்பு

கொழும்பு, செப்.21

சிறைக் கைதிகளிடமிருந்து 7 சிம் அட்டைகள் மற்றும் ஒரு கைத் தொலைபேசி என்பவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

களுத்துறை சிறைச்சாலையிலிருந்து அழைத்துவரப்பட்ட கைதி ஒருவரை சோதனைக்குட்படுத்தும் போது அவரது பொதியினுள் இருந்த காலணியில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 5 சிம் அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மற்றொரு கைதியின் ஆடைக்குள் சிம் அட்டையொன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததோடு, அவரது சீருடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்க தொலைபேசியையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். (ற-இ)

## கொக்கைனுடன் ஒருவர் கைது

கொழும்பு, செப்.21

கல்பிட்டிய பகுதியில் கொக்கைன் போதைப்பொருளுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் 25 வயதுடைய சந்தேக நபர் எனத் தெரியவருகின்றது. இவரிடமிருந்து 480 கிராம் கொக்கைன் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ற-இ)

## ரூ.50 லட்சம் பெறுமதியான கஞ்சா கற்பிட்டியில் மீட்பு

புத்தளம், செப்.21

புத்தளம்,கற்பிட்டி பாராமுன பிரதேசத்தில் எடுத்துச் செல்வதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 50 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. கற்பிட்டி கடற்படைத்தளத்தின் விஜய பிரிவின் புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தப் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. கூட்டு வன்முறையில் ஈடுபடும் சிலரால் இந்தியாவிலிருந்து இந்தக் கஞ்சாத் தொகை கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், கஞ்சா பாராமுன பிரதேசத்திலுள்ள மீன்பிடித் துறைமுகத்துக்கு எவரால் எடுத்து வரப்பட்டதென தெரியவில்லை எனத் தெரிவிக்கும் கடற்படையினர், அவர்கள் மீட்டெடுத்துள்ள போதைப் பொருளைச் சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ப-இ)



## அழுதது தமிழதும் அக்கினி நாவினால்!

நசுக்கும் காந்தீய
நுகத்தடி ஒடிய
பொசுக்கும் அராஜக
பொல்லாமை தீயதை
பார்த்தீபன் ஏற்றி
நசுக்கும் வஞ்சகர்
நடிப்பதை உடைத்தான்!

மானிடம் பேசிடும்
மகான்களின்
பிடிதனில்
மக்களை நேசித்த
மனுவுடன் எரிந்தது
தன்னிகர் இல்லா
தியாகத்து சோதியோ
தண்ணீரும் இன்றியே
துவண்டது நோன்பதில்

நல்லூரின் வீதியில்
நடந்தது யாகமும்
ஈராறு நாட்களாய்
இதயங்கள் அழுதன
ஐந்தம்சம் வைத்துமே
அவனங்கு கரைகையில்
அழுதது தமிழதும்
அக்கினி நாவினால்!


செருக்குறு அராஜகம்
செயல்தனைத் தொடர்ந்தது
நிலமது பிடித்தது
சிறைதனில் வதைத்தது
சகோதர கொலைகளை
சாதிக்க வைத்தது

அகிம்சையின் கரங்களை
அராஜகம் அறுத்திட
அமைதியின் அர்த்தங்கள்
அவமதாய் பறித்திட
திலீபனின் தீயது
திக்கெட்டும் எரிந்தது

மங்கிய விழிகளும்
மறந்திடா கொள்கையும்
பொங்கிய எழுச்சியும்
பார்த்தியதாய் பரவியே
எங்களின் நெஞ்சிலே
எழுதுவோம் விடியலை?

சூரியநிலா, உசன்.

வழமையாக பிரதி திங்கட்கிழமைகளில் உதயனில் பிரசுரமாகும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம் தவிர்க்க இயலாத காரணத்தால் இன்று (21.09.2020) பிரசுரமாகவில்லை. வழமைபோன்று எதிர்வரும் திங்கட்கிழமை மாதிரி வினாப்பத்திரம் வெளிவரும்.



## தியாகதீபம் திலீபன் நல்லூர் வீதியில் நிகழ்த்திய அகிம்சை வேள்வி பற்றிய நேரடி அனுபவங்கள்

# பார்த்தீபனுடன் 12 நாள்கள்



### ஏழாம் நாள்

மு.வே.யோ.வாஞ்சிநாதன்

இன்று காலையில் எழுந்ததும் முதல் வேலையாக யோகியை என் கண்கள் தேடின......

நேற்றைய பேச்சுவார்த்தையின் முடிவு என்னவாக இருக்கும்....? இந்தக் கேள்விதான் இதயத்தின் பெரும் பாகத்தை அரித்துக் கொண்டிருந்தது. காலை 10 மணிவரை எவ்வளவோ முயன்றும் அவர்கள் இருவரும் என் கண்களில் படவேயில்லை. ஆனால், திடீரென்று "இந்தியா ருடே" (India Today) பத்திரிகை நிருபரும் இந்திய துரதர்ஷனின் (இந்தியத் தொலைக்காட்சி ஸ்தாபனம்) வீடியோப் படப்பிடிப்பாளரும், யோகியுடன் வந்து திலீபனைப் படம்பிடிக்கத் தொடங்கினர்.

"இந்தியா ருடே" நிருபர் என்னிடம் திலீபனின் உடல் நிலையைப்பற்றித் துருவித் துருவித் கேட்டுத் தெரிந்துகொண்டார். என்னால் முடிந்தவரை முதல் நாள் உண்ணாவிரதத்திலிருந்து இன்றுவரை அவரின் உடலில் நிகழ்ந்த மாற்றங்கள் அனைத்தையும் விரிவாக எடுத்துக் கூறினேன்.

அவர்கள் சென்ற பின்னர் யோகியை அழைத்து, என் மனதுக்குள் குடைந்துகொண்டிருந்த அந்தக் கேள்வியைக் கேட்டேவிட்டேன். அதற்கு யோகி கூறிய பதில் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

'இந்திய அமைதி காக்கும் படையின் மூத்த தளபதி ஒருவரும் பிரிகேடியர் ராகவன், எயர் கொமாண்டர் ஜெயக்குமார், கடற்படைத் தளபதி அபயசுந்தர் ஆகியோரும் வந்து பேசியதாகவும், உதவித்தூதுவர் வரவில்லை என்றும், திலீபனின் பிரச்சினையில் அவர்கள் ஒரு தீர்க்கமான முடிவை இதுவரை எடுக்கவில்லை" என்றும் யோகி கூறினார்.

அந்தப் பதிலைக் கேட்டதால் அதை ஜீரணிக்க என் மனதுக்கு வெகுநேரம் பிடித்தது. அந்தப் பேச்சுவார்த்தை பற்றிய முழு விவரத்தையும் யோகி திலீபனிடம் விளக்கிக் கூறி, "என்ன செய்யலாம்.....? "என்று கேட்டார்.

பேசச் சக்தியற்று, நடக்கச் சக்தியற்று துவண்டு கிடந்த அந்தக் கொடி, தன் விழிகளைத் திறந்து பார்த்துவிட்டு வழக்கம் போன்று தன் புன்னகையை உதிர்த்தது.

"எந்த முடிவும்.... நல்ல முடிவாக இருக்க வேணும். ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக அவர்கள் எழுத்தில் தரவேணும்.... இல்லையெண்டால்.... நான் உண்ணாவிரதத்தைக் கடைசி வரைக்கும் ... கைவிடமாட்டன்."

ஒவ்வொரு வார்த்தையாக கரகரத்த குரலில் வெளிவந்து திலீபனின் பதில்.



யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் 1985 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வந்த பின்னர் அரசியற் பிரிவுப் பொறுப்பாளராக திலீபன் இருந்து மிகச் சிக்கலான பிரச்சினைகளையெல்லாம் பொதுமக்கள் மத்தியில் தீர்த்து வைத்திருக்கின்றார்.

1986ஆம் ஆண்டு அச்சுவேலியில் ஏற்பட்ட ஒரு சிறு பூசல் காரணமாக மினிபஸ்களின் சொந்தக்காரர்கள் ஒரு வாரகாலமாக பஸ்களை ஓடவிடாமல் வழிமறிப்புப் போராட்டம் நடத்தியதால் மக்கள் மிகுந்த துன்பப்பட்டனர்.

திலீபன் தனக்கேயுரிய புன்முறுவலுடன் அவர்களை அணுகி மிகவும் எளிமையாக அவர்களுடன் பேசி இரண்டு மணித்தியாலத்தில் பஸ்களை ஓடச் செய்தார். யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கு இடையே நடைபெறும் பூசல்கள், கடல் எல்லையிலே ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையே ஏற்படும் சில சிக்கலான பிரச்சினைகள், பல்கலைக்கழகத்தில் ஏற்படும் பிரச்சினைகள், கடை முதலாளிகள் - தொழிலாளர்களின் பிரச்சினைகள், மூடை தூக்குவோர், வண்டி ஓட்டுவோர் - ரக்சிக்காரர்கள், மாநகரசபை ஊழியர்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், மருத்துவர்கள், தாதிமார், வைத்தியசாலை சிற்றூழியர்கள், வழக்கறிஞர்கள், லொறிச் சொந்தக்காரர்கள் இப்படிப் பல ரகமானவர்களின் பிரச்சினைகளையெல்லாம் உடனுக்குடன் பேசிச் சமரசமாகத் தீர்த்து வைத்தவர் திலீபன்.

யாழ்ப்பாணக் கரையோரக் கிராமமான நாவாந்துறையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பலமான இனக்கலவரம் ஏற்பட்டது. கத்திகள், பொல்லுகள், கைக்குண்டுகள், துப்பாக்கிகள் எல்லாம் தாராளமாகப் பாவிக்கப்பட்டன. ஒரே நாளில் பலர் இருபக்கத்திலும் மாண்டனர். பலர் படுகாயமுற்றனர்.

திலீபன் தன்னந்தனியாக இரு சமூகத்தவர்களையும் இரவிரவாகச் சென்று சந்தித்தார். முடிவு? அடுத்த நாள் பெருமழை பெய்து ஓய்ந்தது போல் கலவரம் நின்றுவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மக்கள் மத்தியில் மாபெரும் செல்வாக்கு இருப்பதற்குக் காரணம் இவர்கள் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களிலிருந்து தம் உயிரையே அர்ப்பணித்து மக்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல எந்தச் சிக்கலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும் புலிகளின் அரசியற் பிரிவுத் தலைவர் திலீபனால் அவை நிச்சயமாகத் தீர்க்கப்படும் என்ற உயர்ந்த நம்பிக்கையும் தான்.

மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இரவு பகலாக உறங்காது, வேளா வேளைக்கு உணவின்றி அயராது உழைப்பதில் திலீபனுக்கு நிகர் திலீபன் தான். அவர் சுயமாக எப்போதாவது மினுக்கிய, மடிப்புக் கலையாத ஆடைகள் அணிந்ததையும் நான் பார்த்ததில்லை.

அவரிடம் இருப்பதெல்லாம் ஒரேயொரு நீளக்காற்சட்டை (ட்ரவுசர்) ஒரேயொரு சேர்ட் தான். அரசியல் விசயமாக ஊரெல்லாம் சுற்றி பல பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு காய்ந்த வயிற்றுடன் இரவு 12.00, 1.00 மணிக்கு தலைமை அலுவலகத்துக்கு வருவார். அந்த நள்ளிரவில் அழுக்கேறிய தன் உடைகளைக் களைந்து தோய்த்து காயப் போட்டுவிட்டே படுக்கச் செல்வார். பின்னர் அந்த இயந்திரம் அதிகாலையிலேயே தன் இயக்கத்தை மீண்டும் ஆரம்பித்து விடும்.

இப்படிப்பட்ட திலீபன் இன்று வாடி, வதங்கி தமிழினத்துக்காக தன்னையே அழித்துக் கொண்டிருக்கின்றாரே? எத்தனையோ பேரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த இவரின் பிரச்சினையை, தமிழினத்தின் பிரச்சினையை, யார் தீர்க்கப் போகின்றார்கள்?

சீலமுறு தமிழன் சிறப்பினை இழப்பதோ?
சிங்கள இனத்தவர் நம்மை மிதிப்பதோ?
கோலமுறு திரு நாடினிக் கொள்ளையர்.
விரித்த வலையினில் வீழ்ந்து அழிவதோ?
காலனெனும் கொடும் கயவனின் கையினால்..
கண்ணை இழந்து நாம் கவலையில் நலிவதோ?
நீலமணிக்கடல் நித்தமும் அழுவதோ..?
நாடு பெறும்வரை நம்மினம் தூங்குமோ?

"ஈழமுரசு" பத்திரிகையில் வெளிவந்த இந்தக் கவிதையை ஒருநாள் திலீபன் வாசித்துவிட்டு என் தோள்களைத் தட்டிப் பாராட்டியதை இன்று எண்ணிப் பார்க்கின்றேன்.

வாரா வாரம் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் எனது கவிதைகளை ஒரு தொகுப்பாக்கி வெளியிட வேண்டும் என்ற திலீபனின் ஆசையை நிறைவேற்றுவதற்காக சென்ற வாரம் தான் அவைகளை ஒன்று சேர்த்து பிரதிகள் எடுத்து ஒருபிரதியை ராஜனிடமும் மறு பிரதியை யோகியிடமும் கொடுத்திருந்தேன்.

தலைவர் பிரபாகரன் அந்தத் தொகுப்புக்கு "முன்னுரை" எழுதவேண்டும் என்ற என் விருப்பத்தை திலீபனிடம் வெளியிட்ட போது அவரும் அதற்குச் சம்மதித்தார். உண்ணாவிரதம் முடிந்த பின் முதல் வேலையாகத் தலைவரிடம் சகல கவிதைகளையும் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன். தலைவர் பிரபா ஓர் "இலக்கிய ரசிகன்" என்பது பலருக்குத் தெரியாது.

அந்த நெஞ்சுக் கூட்டுக்குள் நிறைந்து கிடக்கும் இராணுவத் திட்டங்களும், அரசியற் புரட்சிக் கருத்துக்களும், இலக்கியக் குவியல்களும் மலை போன்ற தமிழுணர்வும்.... அப்பப்பா! ஏராளம் ஏராளம்.! அப்படிப்பட்ட ஒரு தலைவனின் வழிவந்த திலீபனின் ஏழாம் நாள் தியாகப் பயணம் தொடர்கின்றது.

*- தியாகம் தொடரும்*

**சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களிலிருந்து தம் உயிரையே அர்ப்பணித்து மக்களைக் காப்பாற்றுவது மட்டுமல்ல, எந்தச் சிக்கலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினையானாலும் புலிகளின் அரசியற் பிரிவுத் தலைவர் திலீபனால் அவை நிச்சயமாகத் தீர்க்கப்படும். எத்தனையோ பேரின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த இவரின் பிரச்சினையை, தமிழினத்தின் பிரச்சினையை, யார் தீர்க்கப் போகின்றார்கள்?**

## மணிவிழா நிகழ்வும் நூல் வெளியீடும்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறைத் தலைவர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகத்தின் மணிவிழாவும் 'ராஜஜெயம்' நூல் வெளியீடும் எதிர்வரும் 27.09.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சமயத்தலைவர்களின் ஆசியுரைகள் துணைவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் கல்விச் சமூகத்தவர்களது வாழ்த்துரைகள் என்பவை இடம் பெறவுள்ளன.

அத்துடன் கலாநிதி ஜெ.இராசநாயகம் எழுதிய கல்வியியற் கட்டுரைகளின் தொகுப்பு நூலாகிய 'ராஜஜெயம்' மணிவிழா மலராக வெளியிடப்படவுள்ளது. (ந)

## சான்றிதழ்கள் கையளிப்பு


முல்லைத்தீவு, செப்.21

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மேசன் தொழிற்பயிற்சி நெறியை மூன்று மாத காலப் பகுதியில் பூர்த்தி செய்தவர்களுக்கான என்.வி.கியூ தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மேசன் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற 58 பேர் இப்பயிற்சி நெறியை நிறைவு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று உதவிப்பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது. (ஐ-19)







# மரப்பாலம் ஆற்றில் முதலைகள் ஆதிக்கம்

கிளிநொச்சி, செப்.21

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மரப்பாலம் ஆற்றுக்குள் நூற்றுக்கணக்கான முதலைகள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

ஸ்கந்தபுரம் மரப்பாலம் ஆறு, அக்கராயன் குளத்திலிருந்து வான் பாயும் நீர் வெளியேறுகின்ற ஆறாகும். இது பூநகரி குடமுருட்டிப் பகுதியைக் கடந்து கடலுக்குச் செல்கிறது.

இந்தப் பகுதியில் அதிகளவான கால்நடைகள் குறித்த ஆற்றை அண்டிய பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபடுவதோடு, தங்களது நீர்த்தேவையையும் பூர்த்தி செய்து கொள்கின்றன. இந்த ஆற்றுப் பகுதியிலேயே அதிகளவான முதலைகளும் காணப்படுகின்றன. அவை பகல் வேளைகளில் ஆற்றோரமாக ஓய்வெடுப்பதைப் பலரும் அவதானித்துள்ளனர்.

நீர் நிலைகளில் தமது தேவைகளை நிறைவேற்றும் மக்கள் இந்த முதலைகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-214)

## கடற்கரையை சுத்தம்செய்யும் பட்டதாரி பயிலுநர்கள்!

முல்லைத்தீவு, செப்.21

நியமனம் பெற்ற பட்டதாரி பயிலுநர்களுக்கான படையினரின் பயிற்சிகள் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளன.

முல்லைத்தீவு கேப்பாபிலவு 59 ஆவது படைப்பிரிவின் பயிற்சி முகாமில் முல்லைத்தீவு மாவட்டத்தையும் புத்தளம் மாவட்டத்தினையும் சேர்ந்த பட்டதாரிகள் அணி ஒன்று பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றது. இவர்களின் பயிற்சி நடவடிக்கையில் ஒன்றாக கரையோர சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை முல்லைத்தீவு கரையோரப் பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டுள்ளன. இவர்களுடன் 59 ஆவது படைப்பிரிவின் படையினரும் இணைந்து முல்லைத்தீவு கடற்கரையின் சுமார் 4 கிலோமீற்றர் தூரத்தைச் சுத்தம் செய்துள்ளனர். (ந-19)





## கடலாமை இறைச்சியுடன் யாழில் நால்வர் கைது

யாழ்ப்பாணம், செப்.21

தடை செய்யப்பட்ட கடலாமை இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட நால்வர் யாழ்ப்பாணம் குருநகர் அண்ணா சிலை பகுதியிலுள்ள வீடு ஒன்றில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வீடு ஒன்றை அவர்கள் சோதனையிட்டனர். இதன் போது அங்கு நான்கு கடல் ஆமைகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு விற்பனைக்குத் தயாராக இருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது குருநகர் பகுதியைச் சேர்ந்த நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட இறைச்சியுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் விசேட அதிரடிப்படையினரால் யாழ்ப்பாணம் நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (ந-20)

## சமூக மேம்பாட்டு அமைப்பின் தலைமைக் காரியாலயம் திறப்பு

முல்லைத்தீவு, செப்.21

தாய்த்தமிழ் பேரவையின் சமூக மேம்பாட்டு அமைப்பின் தலைமைக் காரியாலயத் திறப்பு விழா நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தாய்த்தமிழ் பேரவையின் தலைவர் சி.நாகேந்திரராசா தலைமையில் இடம்பெற்றது.

காரியாலயத்தின் பெயர்ப் பலகையை நிகழ்வின் பிரதம விருந்தினர் மேலதிக அரசாங்க அதிபருமான க.கனகேஸ்வரன், சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கை.சுதர்சன், சட்டத்தரணி செல்வி. நி.ருஜிக்கா, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் திரவீந்திரன், பிரதேச சபை உறுப்பினர் க.விஜிந்தன் ஆகியோர் இணைந்து திரைநீக்கம் செய்து காரியாலயத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் தாய்த்தமிழ் பேரவையின் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு பேரவையின் இணைப்பாளர் தி.ஜெகதீஸ்வரி கவிஞர் யோ.புரட்சி, தமிழ் விருட்ச வவுனியா மாவட்டத்தின் செயலாளர் மாணிக்கம் ஜெகன், தேனி மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் மன்னார் மாவட்டத்தின் தலைவர் பி.பெனில், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கை.சுதர்சன், தாய்த்தமிழ் பேரவையின் இணைப்பாளர் ச.ரூபன் ஆகியோர் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வழங்கியிருந்தார்கள். மேலும் இந் நிகழ்வில் கிராம அமைப்புகள், மக்கள் நலன்விரும்பிகள் என பெருமளவானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ந-213)



## கேப்பாபிலவு காட்டுக்குள் வெற்று மிதிவெடிகள்!

முல்லைத்தீவு, செப்.21

முல்லைத்தீவு கேப்பாபிலவு படைமுகாமை அண்மித்த காட்டுப் பகுதியில் மிதிவெடியில் இருந்து வெடிபொருள்கள் அகற்றப்பட்ட நிலையில் அதிகளவான வெற்று மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் படையினர் சோதனை நடவடிக்கைக்காக சென்றபோது மரம் ஒன்றின் அடியில் அதிகளவான மிதிவெடிகள் காணப்பட்டுள்ளன.

இவற்றைச் சோதனை செய்த போது அவைகளிலிருந்து வெடிபொருள்கள் அகற்றப்பட்டமை தெரியவந்துள்ளது. போரின்போது விடுதலைப் புலிகளால் கைவிடப்பட்டுள்ள மிதிவெடிகள் இவை என படையினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் படையினரால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து 654 வெற்று மிதி வெடிக் கவர்கள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (ந-19)

# 20ஆவது திருத்தத்தில் திருத்தங்கள் அவசியம்

## சுதந்திரக்கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, செப்.21**
**20 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எமது பொதுவான நிலைப்பாடாகும். இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

20 தொடர்பாக ஆராய்வதற்காக சு.க. குழுவொன்றை நியமித்து சுயாதீனமாக ஆராயும் என்று கூறப்பட்ட போதிலும் இதுவரையில் குழு நியமிக்கப்படாமை தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திர கட்சியால் இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்படுகின்ற குழுவின் அறிக்கைக்கு அமையவே எமது உத்தியோகபூர்வ நிலைப்பாடு அறிவிக்கப்படும்.

இந்த வாரத்தில் 20 தொடர்பில் ஆராயும் குழு நியமிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். அந்தக் குழுவால் முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளுக்கு அமைய சுதந்திரக் கட்சி அதன் நிலைப்பாட்டை அறிவிக்கும். அதனால் தற்போது விரிவாக எந்த கருத்தையும் எம்மால் கூற முடியாது-என்றார். (எ-இ)



## இணையத்தள அறிமுகம்

வவுனியா, செப். 21

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் இணையத்தள அறிமுக விழா சங்க மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

சங்கத்தின் உபதலைவர் செல்லத்துரை சபாநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட கணபதி சித்தர் மு.க.கந்தசாமிக்குருக்கள் இணையத்தளத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இணையத்தளத்துக்கான அறிமுக வுரையை ஆசிரியர் வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் சு. ஜெயச்சந்திரன், நிகழ்த்தியிருந்தார். நிகழ்வில் சிவசிறி க.கந்தகணேசதாசக் குருக்கள், சங்கத்தின் செயலாளர் தே.அமலன், நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராயா, மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-110)

## 8 பிரிவுகளில் 13 விருதுகளை வென்றது ‘மண்குளித்து’ நாடகம்

கிளிநொச்சி கலைஞர்களின் ‘மண்குளித்து’ நாடகம் 2020ஆம் ஆண்டின் சிறந்த நெடுநாடகமாக முதல் இடத்தைப் பெற்றதுடன் 8 பிரிவுகளில் 13 தேசிய விருதுகளை வென்றது.

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச நாடக குழு இணைந்து 2020ஆம் ஆண்டின் 48ஆவது அரச நாடக விழாவை கடந்த பெப்ரவரி மாதம் நடத்தியிருந்தது. கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவர்களால் அரங்கேற்றப்பட்ட ‘மண்குளித்து’ என்ற நாடகம் கடந்த பெப்ரவரியில் எல்பிஸ்டன் திரையரங்கில் போட்டிக்காக அரங்கேறியது.

குறித்த போட்டி நிகழ்வு மூன்று சுற்றுக்களாக இடம்பெற்றது. குறித்த நாடகப் போட்டிக்காக இவ்வருடம் 32 குறுநாடக பிரதிகளும் 20 நெடுநாடக பிரதிகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் 5 குறுநாடகங்களுடன் 2 நெடுநாடகங்களும் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகியிருந்தன. இறுதி சுற்றின் போட்டி முடிவுகள் அறிவிக்கும் நிகழ்வு கடந்த 11ஆம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பு தாமரைத்தடாகம் கலையரங்கில் பிரமாண்டமாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி கலைஞர்களால் அரங்கேற்றப்பட்ட அருணாசலம் சத்தியானந்தன் மற்றும் பிரதீப்ராசா ஆகியோரின் நெறியாள்கையில் உருவான ‘மண்குளித்து’ நாடகம் ஆண்டின் சிறந்த நெடுநாடகமாக முதல் இடத்தை பெற்றுக் கொண்டது. 8 பிரிவுகளில் 13 தேசிய விருதுகளையும் குறித்த குழு வென்றது.

சிறந்த தயாரிப்பு, இயக்கம், நாடக நயனம், ஒளியமைப்பு, இசை, நடிப்பு, அரங்க முகாமைத்துவம், சிறந்த நாடக எழுத்துருவாக்கம் ஆகியவற்றுக்கும் தேசிய விருதுகள் கிடைத்துள்ளன. (ம-6)

## நூல் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 21

தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான அதிவண கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அடிகளாரின் ‘அமெரிக்காவில் இருந்து யாழ்ப்பாணத்துள் ஆறாகப் பாய்ந்து வந்த அன்பு வெள்ளம்’ நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் பீற்றர் மண்டபத்தில் வண.ஏ.தேவகுணாளன் தலைமையில் இடம்பெற்றது.



நூலின் தமிழ்மொழி மூல பதிப்புக்கான விமர்சன உரையை யாழ். பல்கலைக் கழக ஆங்கிலத் துறை விரிவுரையாளர் கலாநிதி எம்.திருவரங்கனும் தமிழ்மொழி மூலப் பதிப்புக்கான விமர்சன உரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் நிகழ்த்தினர். ஆங்கில நூலின் முதற் பிரதியை சட்டத்தரணி க.சுகாஸ் மற்றும் தமிழ் மொழிப் பதிப்பின் முதற் பிரதியை காவேரிக் கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி ரி.எஸ். யோசுவா அடிகளாரும் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், மதகுருமார்கள், மருத்துவர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம)

## சுற்றாடலுக்கு நேயமான அரசை உருவாக்குவோம்

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, செப்.21

சுற்றாடல் நேயமான அரசொன்றை அமைப்பதற்காக அடிமட்டத்திலான கட்டமைப்பு செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ‘வெல்வோம்’ தேர்தல் பரப்புரை நிலையங்களை அமைக்கும் வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் மாத்தறையில் நடைபெற்றது. அதில் மாத்தறை மாலிபட தொகுதியில் ஒகஸ்பேகங்காராம விகாரையில் மண்டபமொன்றைத் திறந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியை பலமான கட்சியாக மாற்றுவதற்காக அடிமட்டத்திலான கட்டமைப்புகளை செயற்படுத்தும் நோக்கத்தில், நாடளாவிய ரீதியில் தேர்தல் பரப்புரை நிலையங்களை உருவாக்கும் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எமது கட்சியைப் பலப்படுத்துவதுடன், சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் எமது செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்த்திருக்கின்றோம்.

சுற்றாடல் பாதுகாப்புக்காக செயலணியொன்றை அமைத்துள்ள அரசியல் கட்சி என்ற வகையில், சுற்றாடலுக்கு நேயமான அரசை உருவாக்குவதற்காகவே நாங்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றோம்-என்றார். (எ-இ)

## 20 மீளாய்வு அறிக்கை நாடாளுமன்றத்துக்கு!

கொழும்பு, செப்.21

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் பிரதமரால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு பரிந்துரைந்த அறிக்கை மீண்டும் நாடாளுமன்றத்தின் ஊடாகப் பரிசீலனை செய்யப்படும். இந்த விடயத்தில் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் இடையே எந்த முரண்பாடும் இல்லை.

இவ்வாறு காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்ரசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

சுமுகமான பேச்சுகள் ஊடாகக் கருத்து வேறுப்பாடுகளுக்குத் தீர்வு பெற்றுக் கொள்ளப்படும். 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. விமர்சனங்கள் இல்லாமல் ஒரு விடயத்தைச் செயற்படுத்துவது சாத்தியமற்றது

19ஆவது திருத்தத்தால் அரச நிர்வாகத்துக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் கடந்த அரசை முழுமையாகப் பலவீனப்படுத்தியது. 20ஆவது திருத்தத்தால் அரசு பலவீனமடையக் கூடாது என்பதற்காகவே வர்த்தமானியில் வெளியான ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலைமையைக் கொண்டு எதிர்தரப்பினர் ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். இவ்வாறான நிலைமைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது-என்றார். (எ-இ)

## பாடசாலை கதவை உடைத்து பட்டப்பகலில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 21

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் கதவை உடைத்து அங்கு இருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன. பாடசாலையின் இரவு நேரக் காவலாளி நேற்று முன் தினம் மாலை கடமைக்கு வந்தபோது அதிபர் அலுவலகத்தின் கதவு உடைக்கப்பட்டு ரூபா ஒரு இலட்சம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருப்பது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

# கொரோனா அபாயம் மீண்டும் எச்சரிக்கை



கொழும்பு,செப்.21

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று தொற்று நோய் தடுப்பு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பில், தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மக்கள் அனைவரும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்தைக் கடந்துள்ளது. இதுவரையில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தொற்று நோய்த்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

## காற்றுடன் மழை நீடிக்கும்

கொழும்பு,செப்.21

தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி நிலை காரணமாக, நாட்டில் காற்றுடன் கூடிய மழை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும்.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமத்திய மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும், மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும், காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர்வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# ஜனாதிபதி வயதெல்லையை குறைப்பது பொருத்தமில்லை

## அபயதிஸ்ஸ தேரர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.21

ஜனாதிபதிப் பதவிக்கான வயதெல்லையை 35 வயதிலிருந்து 30 வயதாகக் குறைப்பது பொருத்தமானது அல்ல என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசியல் வேலைத் திட்டத்தில் இணைந்து செயற்பட்ட முக்கிய பௌத்த தேரரான பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் மேற்கொண்டவாறு தெரிவித்துள்ளார். சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்றுமுன்தினம் மெதகொட அபயதிஸ்ஸ தேரரைச் சந்தித்து ஆசிபெற்றார். அதில் 20 ஆவது அரசியல் திருத்தம் பற்றிப் பேசப்பட்டது என்றும், அப்போது கருத்துத் தெரிவித்த தேரர் மேற்கண்டவாறு கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகத் தேரர் மேலும் தெரிவித்துள்ளதாவது

30 வயதான இளம் நபர் ஜனாதிபதியாக பதவிக்கு வருவார் என்றால் அது நாட்டுக்கு அபாக்கியம்.

நாட்டின் ஜனாதிபதியாக பதவிக்கு வர ஒருவர் 35 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதை 30 வயதாக மாற்ற வேண்டியது அவசியமா?.

அந்த பதவிக்கு வர 35 வயதாகி பரிபூரணமடைய வேண்டும். கௌதம சித்தார்த்தர் புத்தராக பரிபூரணமடையவும் 35 ஆண்டுகளானது- என்றார். (எ-இ)

# கடலட்டை, மஞ்சள் கடத்த முயன்ற 3 பேர் சிக்கினர்!

கொழும்பு, செப்.21

தமிழகத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்ட கடல் அட்டைகள், உலர்ந்த மஞ்சள் அடங்கிய 22 பொதிகள் நடுக்கடலில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், மூன்று மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்தியக் கடலோரக் காவல் படை தெரிவித்துள்ளது.

இராமேஸ்வரம், தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து பாம்பன் கடல் வழியாக இலங்கைக்கு கடத்தவிருந்த பொதிகளே கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பொதிகளில் சுமார் 800 கிலோ கடல் அட்டைகளும், 400 கிலோ உலர் மஞ்சளும் இருந்தன என்றும், அவற்றின் பெறுமதி இந்திய நாணய மதிப்பில் சுமார் 20 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கடலோரக் காவல் படைக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாம்பன், குந்துக்கால் கடலில் பழுதடைந்து தத்தளித்த படகொன்றில் இருந்த மீனவர்களிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்ததால் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் படகைச் சோதனையிட்டபோதே இந்தப் பொதிகள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றல்!

27 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளது. சேவைத் தேவையின் அடிப்படையில் இந்த இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலையடுத்து இவ்வாறு பணி இடமாற்றல் வழங்கப்பட்டுள்ளது.

இடமாற்றல் செய்யப்பட்டவர்களில் மத்திய மற்றும் ஊவா மாகாண சிரேஷ்ட உப பொலிஸ்மா அதிபர்களும் உள்ளடங்குகின்றனர்.

பொலிஸ் போதைப் பொருள் பணியகத்துக்குப் பொறுப்பான உப பொலிஸ்மா அதிபர் உட்பட 11 உப பொலிஸ்மா அதிபர்கள், 11 பொலிஸ் அத்தியட்சகர்கள், இரு பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் உப பொலிஸ் அத்தியேட்சகர் ஒருவர் ஆகியோரே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர். (எ-இ)

## நுவரெலியா மாவட்ட அபிருத்திக்குழு கூட்டம்

நுவரெலியா மாவட்டத்தின் முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் எஸ்.பி திசாநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் நுவரெலியா மாவட்டத்தின் கடந்த கால அபிவிருத்திகள் பற்றியும், எதிர்கால அபிவிருத்திகள் பற்றியும் ஆராயப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தின் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தில் போக்குவரத்து வசதிக் குறைபாடுகள் உள்ளன என்று அதிகாரிகள் கருத்து முன்வைத்தனர்.

அதைக் கருத்தில் கொண்ட சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் போக்குவரத்துக்காக வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் என்று உறுதியளித்தார். (எ-இ)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களுடனான வடமாகாண ஆளுநரின் கலந்துரையாடல் நாளை காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை யாழ் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. காலை 9 மணியிலிருந்து 11 மணிவரை யாழ்ப்பாணம் நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய பிரிவுகளுக்கும் 11 மணியிலிருந்து 12.30 மணிவரை கரவெட்டி, பருத்தித்துறை, வேலணை, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரிவுகளுக்கும் நண்பகல் 1.30 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை காரைநகர், சங்கானை, சாவகச்சேரி, உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரிவுகளுக்கும் நடைபெறவுள்ளன. (ம-159)

# இந்திய இழுவைப் படகுகளால் முல்லை மீனவர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு கடற்பரப்பினுள், தற்போது இந்திய இழுவைப் படகுகளின் வருகை மிகவும் அதிகரித்துள்ளதால் தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றோம் என்று அங்குள்ள மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய இழுவைப் படகுகளால் எமது வாழ்வாதாரம் ஒவ்வொரு நாளும் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றது.

இது தொடர்பில் எமது பிரதிநிதிகள் பெரிதாகப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. எமது பிரச்சினைகள் தொடர்பில் நாம் பல முறைப்பாடுகளை வழங்கியும் இன்னும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்திய இழுவைப் படகுகளால் முல்லைத்தீவு மீனவர்களுடைய பதினைந்திற்கும் மேற்பட்ட வலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. எனவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என்றனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மோகனகுமார் கருத்துத் தெரிவிக்கையில்,

அண்மைய நாட்களாக இந்திய இழுவைப் படகுகள் முல்லைத்தீவுக் கடற்பரப்பிற்கு வருகைதருவதாக மீனவர்கள் எம்மிடம் தெரியப்படுத்தியிருக்கின்றனர்.

இதுவிடயம் தொடர்பாக கடற்படையினருடன் கலந்துரையாடியிருந்தேன். முல்லைத்தீவுக் கடற்பரப்பினுள் இந்திய இழுவைப் படகுகளை நுழைய விடாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர் - என்றார். (ம-246)

# ஐ.தே.க. தேசியப்பட்டியல் ஜோன் அமரதுங்கவுக்கு?

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கட்சியின் மூத்த உறுப்பினரான ஜோன் அமரதுங்கவுக்கு வழங்கக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விருப்பம் வெளியிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கையளித்த தேசியப் பட்டியல் வேட்பாளர் பட்டியலில் ஜோன் அமரதுங்கவின் பெயர் முதலில் உள்ளது.

எனினும் பொதுத் தேர்தல் முடிந்து ஒன்றரை மாதங்கள் கடந்துள்ளபோதும், ஐக்கிய தேசியக் கட்சி தனக்குக் கிடைத்த தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எவரையும் நியமிக்கவில்லை.

இந்தத் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் உட்பட, தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த 5 பேர் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் புதிய பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அந்தக் கோரிக்கைகளைப் புறக்கணித்து, தேசிய பட்டியலில் முதலிடத்தில் இருப்பவருக்கு சந்தர்ப்பத்தை வழங்க ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

# ஐந்து இலட்சம் பேர் போதைக்கு அடிமை

**கொழும்பு, செப்.21**

**நாட்டில் பல்வேறு நோய்களுக்காக பயன்படுத்தப்படும் வலி நிவாரணங்களை அதிகமாக உட்கொண்ட ஒரு இலட்சம் பேர் வரையில் போதைக்கு அடிமையாகியுள்ளனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.**

நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளால், போதைப்பொருளுக்கு அடிமை யாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று சபையின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் லக்நாத் வெலகெதர தெரிவித்துள்ளார்.

அது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது சுமார் மூன்று இலட்சம் பேர் கஞ்சாவுக்கு அடிமையாகியுள்ளனர். நாட்டில் ஐந்து இலட்சம் பேர் வரையில் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். அதேவேளை, போதைப்பொருளை ஒழிப்பதற்கான பல நடவடிக்கைககள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே இது தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்படுகின்றது. அனைத்து பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் தெளிவூட்டப்படுகின்றது. என்றார். (எ-இ)

## பரெல் ரஞ்சி கைது

போதைப்பொருள் கடத்தல்காரரான 'பரெல் ரஞ்சி' என அழைக்கப்படும் மொஹமட் ஃபாரூக் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் நேற்றுக் காலை 6 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 7 கிராம் ஹெரோயின், 20 கையடக்க தொலை பேசிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (எ-இ)

## வலி. தென்மேற்கு சபையில் திலீபனின் அஞ்சலி தவிர்ப்பு

நீதிமன்றத்தின் தடை உத்தரவைத் தொடர்ந்து வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் இடம்பெறவிருந்த தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்வு உறுப்பினர்களின் ஆலோசனைக் கமைய இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் பதில் செயலாளர் பிரதீப் முன்னிலையில் சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தேநீர் இடைவேளையைத் தொடர்ந்து தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஒழுங்குகளை தவிசாளர் மேற்கொண்டிருந்தார். ஐந்து கட்சிகளைச் சேர்ந்த 28 உறுப்பினர்களைக் கொண்டபிரதேசசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்நிலையில் தேநீர் இடைவேளையை தொடர்ந்து கூட்டம் ஆரம்பமான போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் சுப்பிரமணியம், தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளமையால் இத்தடையை மீறி சபையில் அஞ்சலி செலுத்தினால் சட்டப் பிரச்சனைகள் ஏற்படக்கூடும் எனவே இந்த நிகழ்வை நிறுத்திவைப்பது நல்லது என்று கூறினார். இவரின் கருத்தை சக உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டமையை அடுத்து அஞ்சலி நிகழ்வு இறுதிநேரத்தில்கைவிடப்பட்டது. (ம-115)

## இலங்கையின் தீர்மானத்தை வரவேற்கின்றதாம் எகிப்து!

தனது தேசிய சுதந்திரத்தையும் இறையாண்மையையும் பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்குகின்ற இலங்கையின் தீர்மானத்துக்கு எகிப்து வரவேற்புத் தெரிவித்திருக்கிறது.

இலங்கைக்கான எகிப்திய தூதுவர் ஹுசைன் அல் சஹார்டி வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன்போது தூதுவர் இலங்கையின் தீர்மானத்துக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இருநாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாகப் பேணப்பட்டுவரும் இருதரப்பு நல்லுறவு தொடர்பில் நினைவுகூரப்பட்டது. 1957 ஆம் ஆண்டில் இலங்கையுடன் தனது இராஜதந்திரத்தொடர்புகளை ஆரம்பித்த முதலாவது ஆபிரிக்க அரேபிய நாடாக எகிப்து விளங்கியமை குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு தற்போதைய சூழ்நிலையில் இருநாடுகளுமே அடிப்படைவாதம், கொவிட் 19 வைரஸ் பரவலின் பின்னரான பொருளாதார நெருக்கடி நிலை, சுற்றுலாப்பயணத்துறையின் பின்னடைவு, காலநிலை மாற்றம், போதைப்பொருள் மற்றும் ஆட்கடத்தல் போன்ற ஒரேவிதமான சவால்களை எதிர்கொண்டுள்ளன என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் தினேஷ் குணவர்தன, அவற்றை முறியடிப்பதில் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## பண மோசடியில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர் கைது

கொழும்பு,செப்.21

விகாரைகளின் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பொருள்கள் மற்றும் உபகரணங்களுக்கென கூறி பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடங்கொட, மீகஹதென்ன, பதுரலிய மற்றும் மத்துகம பகுதிகளிலுள்ள விகாரைகளுக்குச் சென்ற சந்தேகநபர் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார் என்று பல முறைப்பாடுகள் ஏற்கனவே கிடைக்கப் பெற்றுள்ளன.

சந்தேக நபரான ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் இராணுவச் சிப்பாயாகத் தன்னை அடையாளப்படுத்தி பண மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

சந்தேக நபர் இராணுவக் கட்டுமானப் பணிகளில் மிகுதியாகவுள்ள சீமெந்து, மண், கல் மற்றும் மாபிள்கள் உள்ளிட்ட பொருள்களை விகாரைகளின் நிர்மாணப் பணிகளுக்கு வழங்குவதாக தேரர்களிடம் கூறி, பண மோசடி செய்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹொரண பகுதியைச் சேர்ந்த 58 வயதான ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஆவார்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (க-இ)

## புனித திருத்தல தரிசன யாத்திரை

கொடிகாமம் செப் 21

நல்லூர் கந்தன் ஆலயத்திலிருந்து நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் வரை புனித திருத்தலத் தரிசன யாத்திரை இடம்பெறவுள்ளது.

இந்த யாத்திரை இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஒழுங்கமைப்பில் நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் எதிர்வரும் சனிக்கிழமை காலை 6.30 க்கு ஆரம்பமாகவுள்ளது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு இலங்கையில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கிடையேயான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளரவும் உலகமெல்லாம் அச்சுறுத்திவரும் கொரோனா நோய் விலகவும் இறையருள் வேண்டியே யாத்திரை இடம்பெறவுள்ளது. இதில் இணைய விரும்பும் அடியார்கள் ஆசார சீலர்களாய் கலாசாரத்தைப் பேணும் வகையில் இறை பக்தியுடன் கலந்து இறையருள் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப-159)

## மசகு எண்ணெய் அடர்த்தியை தடுக்கச் சிறப்பு நடவடிக்கை

கப்பலிலிருந்து கடலில் கசிந்துள்ள மசகு எண்ணெயின் அடர்த்தியைக் குறைப்பதற்கு கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கப்பலுக்கு அருகிலிருந்து 2 கடல் மைல் தொலைவு வரை எண்ணெய் படிமங்கள் படிந்துள்ளது என்று கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி டர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணெய் படிமங்களில் விமான படையூடாக, படிமங்களின் அடர்த்தியை குறைப்பதற்கான திரவம் விசிறப்படுகின்றது என்றும் எண்ணெய் படிமத்தினூடாகப் படகைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், எண்ணெய் படிமம் தொடர்ந்தும் கடலில் உள்ளதால் கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)






## பரிசளிப்பு விழா

கொடிகாமம், செப். 21

கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் 2020ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு நிகழ்வு அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் பாடசாலையின் செல்வநாயகதேவி அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட செயலரும் க.மகேசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். சாவகச்சேரி கோட்டக்கல்வி பணிப்பாளர் வ.நடராசா மற்றும் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-159)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் நீண்டகால
பரிபாலன சபை உறுப்பினரும்
ஆலய வளர்ச்சிக்கு பெரும்
பங்காற்றியவர்களில் ஒருவருமான

**சுப்பிரமணியம்**
**சிறிஸ்கந்தராஜா (கதிரமலை)**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02.12.1952 | 19.09.2020 |

அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா ஓடயம்பதியானின் பொற்பாதங்களை
சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
**ஓடயம்பதி கற்பகவிநாயகர் ஆலயம்**
**உரும்பிராய்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 23 |
| 07 | 08 |
| 1928 | 2020 |

கடந்த 23. 08. 2020 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் இராமநாதன் முத்தையா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.09.2020) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் நயினாதீவு கங்காதரணி புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிரியைகள் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**


6 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.
077 671 4166, 077 844 5063

## ஒழுக்காற்று விசாரணைக்கு...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலரான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்கள் மீதும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கோரியுள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்பினர் தகுதி நிலையிலிருந்து மணிவண்ணனை இடைநிறுத்துவதாக கடந்த 5ஆம் திகதி அறிவித்த அந்தக் கட்சியின் தலைவர், அது தொடர்பில் மணிவண்ணனுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார். 'கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு பதிலளிக்க மணிவண்ணனுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குள் அவர் தனது பக்க நியாயங்களை கட்சிக்கு அறிவிக்கவேண்டும். அதன்பின்னர் கட்சியால் அவர் மீது முன்வைக்கப்படும் 6 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும்' என்றுதமிழ்தேசியமக்கள்முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் வி.மணிவண்ணன் தனது பதில் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார். கட்சியால்முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று விசாரணைக்கு ஒத்துழைப்பேன். ஆனால் ஓய்வுபெற்ற நீதிபதி அல்லது ஒழுக்காற்று விசாரணையை நடத்தும் முன் அனுபவமும் கட்சிசாராத சுயாதீன அதிகாரியாக உள்ள குறைந்தது மூவர் கொண்ட குழு முன்னிலையில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கேட்டுள்ளார். தன் மீதான ஒழுக்காற்று விசாரணை பொது மக்கள், ஊடகங்கள் முன்னிலையில் பகிரங்கமாக இடம்பெறவேண்டும் என்றும் வி. மணிவண்ணன் வலியுறுத்தியுள்ளார். இதே வேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலரான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்கள் மீதும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வி.மணிவண்ணன் கேட்டுள்ளார். (ஒ.இ)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 20 |
| 08 | 09 |
| 1950 | 2020 |

### மயில்வாகனம் சிவலோகநாதன் (சிவா)

(ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்)

கொழும்பை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர் மயில்வாகனம் சிவலோகநாதன் (சிவா) நேற்று (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மயில்வாகனம் கனகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சோமசுந்தரம் பூரணம் தம்பதியரின் அருமை மருமகனும், வசந்தியின் பாசமிகு கணவரும், சுஜி, ரூபி, பாமினி, சர்மினி, சுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், தனராஜ், சுபராஜ், காண்டீபன், மகிந்தன், கோகுலன் ஆிகயோரின் மாமனாரும், மதுரமி, மதுமிதன், மதுரிசன், சாயகன், சுஞ்சயன், காவியா, அபிநிசா, அருக்சன், அகிசன், டக்சின், நிவேசின் ஆகியோரின் அன்புப் பேரனும், மனோகரன், செல்வம், பவா, ராஜன் காலஞ்சென்ற ஜெகன், இந்திரா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தேவி மற்றும் ராணி, தயா, சாந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2020) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

**36/9, காட்டுக்கந்தோர்**
**ஒழுங்கை, சுண்டிக்குளி,**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 133 9998**

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்தவரும்,
உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டப
நிர்வாகசபை உறுப்பினருமான

### சுப்பிரமணியம் சிறீஸ்கந்தராஜா
### (கதிரமலை)




அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு மனம் வருந்துவதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கந்தசாமி தர்மகுலசிங்கம்
கந்தசாமி ஜெயவீரசிங்கம்
(உரிமையாளர்கள், கலாசார மண்டபம்)
தம்பையா ராஜரட்ணம்
(முகாமையாளர், கலாசார மண்டபம்)
மற்றும்
கலாசார மண்டப நிர்வாக சபையினர்.

**கற்பக விநாயகர்**
**கலாசார மண்டபம்,**
**இல.69, பலாலி வீதி,**
**உரும்பிராய்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
12.08.1963

ஆண்டவன் அடியில்
22.08.2020

### அமரர் தம்பாப்பிள்ளை சிவபாலன் (அப்பன்)

கடந்த 22.08.2020 சனிக்கிழமை
சிவபதம் அடைந்த குடும்பத்தலைவர் அவர்களின்
ஞாபகார்த்தமாக இன்று (21.09.2020) திங்கட்கிழமை
நண்பகல் 12 மணியளவில் **சுழிபுரம் மத்தியில் உள்ள**
**பாக்கிய பவனம் இல்லத்தில்** நடைபெறும்
மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாக்கிய பவனம்,
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

**குடும்பத்தினர்.**

## சுப்பர் ஓவரில்


# பஞ்சாப்பை பறக்கவிட்டது டில்லி

பரபரப்பாக நகர்ந்த ஆட்டத்தில் சுப்பர் ஓவரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப்பை பந்தாடியது டில்லி கப்பிரல்ஸ்.


ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது ஆட்டம் டுபாயில் நேற்று இடம்பெற்றது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், டில்லி கப்பிரல்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவர் கே.எல்.ராகுல் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

டில்லி அணிக்கு ஆரம்பம் மோசமாக அமைந்தது. சிகர் தவான் ரன் அவுட்டாகி ஓட்டம் எதனையும் பெறாது வெளியேறினார். பிரித்திவி சா 5 ஓட்டங்களுடனும், ஹெட்மயர் 7 ஓட்டங்களுடனும் நடையைக்கட்டினர். மத்திய வரிசையில் அணித் தலைவர் ஸ்ரேஸ் ஐய்யர், ரிசப் பந்த் ஆகியோர் சிறப்பான அடித்தளம் அமைக்க ஸ்ரோனிஸ் அதிரடியாக விளாசினார். அவர் 21 பந்துகளில் 53 ஓட்டங்களை விளாச 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது டில்லி கப்பிரல்ஸ்.



பதிலுக்கு களமிறங்கிய பஞ்சாப்புக்கு சொல்லும்படியாக ஆரம்பம் அமையவில்லை. சீரான இடைவெளிகளில் விக்கெட்கள் வீழ்ந்தன. கடந்த காலத்தில் பஞ்சாப்பு தலைமை தாங்கிய அஸ்வின், இம்முறை டில்லி அணிக்காக விளையாடுகின்றார். அவரது முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இறுதிப் பந்தில் அவரது கையில் காயம் ஏற்பட்டதால் ஆட்டத்திலிருந்து இடையிலேயே வெளியேறினார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய மயன் அகர்வால் மாத்திரம் இறுதி வரையில் போராடினார். ஒரு கட்டத்தில் தோல்வியை நோக்கிச் சென்ற அணியை தூக்கி நிறுத்தி வெற்றியின் அருகில் வரை அழைத்து வந்தார். இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு போதுமான வாய்ப்பு இருந்தும் பஞ்சாப் அணி அதனை தவறவிட்டது. அகர்வால் 60 பந்துகளில் 89 ஓட்டங்களை விளாசினார். இறுதியில் 8 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைப் பஞ்சாப்பும் பெற ஆட்டம் சுப்பர் ஓவருக்குச் சென்றது. முதலில் களமிறங்கிய பஞ்சாப், ரபடாவின் முதலாவது பந்தில் 2 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்த இரண்டு பந்துகளில் ராகுல், பூரன் இருவரும் ஆட்டமிழக்க பஞ்சாபின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. பதிலுக்கு இறங்கிய டில்லி இலக்கு இழப்பின்றி வெற்றியைப் பெற்றது. சகலதுறையில் கலக்கிய ஸ்ரொனிஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (ஓ,5)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சுப்பிரமணியம் கலாதீபன்

LL.B, BA, PGDE (Dis), Trd - English
SLEAS - III & Attorney - at - Law)
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம், வலிகாமம் கல்வி வலயம்)

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கலாதீபன் அவர்கள் **18.09.2020 வெள்ளிக்கிழமை அன்று உயர் நீதிமன்ற கௌரவ பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரியா முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்** செய்து கொண்டார். மேலும் அவர் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.




**வாழ்த்துவோர்:**
மயூரன் (பிரான்ஸ்)- தட்சாயினி குடும்பத்தினர்
தங்கா ராஜி - கரிகரன் (UK) குடும்பத்தினர்
இ.கணேசராசா
(சமாதான நீதிவான். யாழ். மாநகர சபை முதலாம் வட்டார உறுப்பினர் - நாச்சிமார் கோயிலடி)

# பழமையான கால்தடங்கள் சவூதியில் கண்டுபிடிப்பு


ரியாத், செப்.21

சவூதிஅரேபியாவில்1.2இலட்சம்ஆண்டுகளுக்கு முந்தைய மனித மற்றும் விலங்கு களின் கால்தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

சவூதி அரேபியாவில் வடமேற்குபகுதியில்உள்ளதபூக் மாகாணத்தின்ஒருபழங்கால ஏரியிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து சவூதி அரசு தெரிவிக்கையில், அரேபியதீபகற்பத்தில் பழமையான வசிப்பிடத்தின் முதல் அறிவியல் சான்று கள் என இவற்றைக் குறிப்பிட்டுள்ளது.

புறநகர் பகுதியில் உள்ள இந்தவறண்டஏரியைச்சுற்றிலும் மனிதர்கள், யானைகள் மற்றும் மான்கள் போன்ற விலங்குகளின்கால்தடங்கள் கிடைத்துள்ளன.



இதுவரை சுமார் 233 யானைகளின் புதைபடி வங்கள், ஏழு மனிதர்கள், 107 ஒட்டகங்கள்மற்றும்பிறவிலங்குகளின் தடயங்களை அகழ்வாராய்ச்சிக் குழு கண்டறிந்துள்ளது. (வ-இ)

## பகிரங்க ஏலவிற்பனை
## கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்
## பிராந்திய கால்நடைபண்ணை-அச்சுவேலி

பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கீழுள்ள பிராந்திய கால்நடைப்பண்ணை,அச்சுவேலியின் பாவனையிலுள்ள் பின்வரும் பொருள்கள் **07.10.2020** ஆம் திகதி மு.ப. **10** மணியளவில் பிராந்திய கால்நடைப் பண்ணை,கைத்தொழில்பேட்டை,அச்சுவேலி எனும் முகவரியில் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன.

| NO | Equipment Name | Details |
|---|---|---|
| 1 | Generator 12.5kVA | Model-Lister Peter |
| 2 | Incubator set with tray | Model-Karamsar |
| 3 | Photocopy Machine | Model-Canon |

எனவே ஆர்வமுள்ளவர்கள் இவ் உபகரணங்களை அலுவலக நாள்களில் **05.10.2020,06.10.2020** திகதிகளில் மு.ப. **9.30** மணிமுதல் பி.ப.**3.30** மணிவரை பிராந்திய கால்நடைப்பண்ணை, கைத்தொழில்பேட்டை, அச்சுவேலி எனும் முகவரியில் பார்வையிடலாம் என்பதுடன் **07.10.2020** ஆம் திகதி இடம்பெறவுள்ள பகிரங்க ஏலவிற்பனையில் கலந்துகொள்ளலாம் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பிரதி பணிப்பாளர்,**
**கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.**

## தடைக்கு எதிராக...

தடை நீக்கத்துக்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நினைவேந்தலுக்கான தடைகளை நீக்கக் கோரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசிடம் தமிழ்க் கட்சிகள் ஓரணியில் முன்வைத்துள்ள நியாயமான கோரிக்கைகளை வரவேற்றுள்ள ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அஸாத் ஸாலி தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி உள்ளிட்ட முஸ்லிம் கட்சிகள், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிதுங்க ஜயசூரிய தலைமையிலான ஐக்கிய சோசலிசக் கட்சி, விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையிலான நவசமசமாஜக் கட்சி உள்ளிட்ட முற்போக்கு கட்சிகள் ஆகியவற்றுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிடின் நாம் முன்னெடுக்கவுள்ள சாத்வீகப் போராட்டங்களுக்கும் மேற்படி கட்சிகள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளமையையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம். நாட்டிலுள்ள ஏனைய ஜனநாயகக் கட்சிகள், முற்போக்கு சக்திகள், புத்திஜீவிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் ஆதரவையும் நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

அதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளில் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும் எமது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரசுக்கு அழுத்தம் கொடுத்து உரையாற்ற வேண்டும் என்றும் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இறந்த உறவுகளை நினைவுகூர ஒவ்வொரு இனத்துக்கும் உரிமையுண்டு. அதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.

**அரசு தப்ப முடியாது**

தியாக தீபம் திலீபன் நினைவேந்தலுக்கான தடைகளை நீதிமன்றங்களின் ஊடாக பொலிஸாரே கோரினர். பொலிஸார் தனியார் அமைப்பினர் அல்லர். அவர்களும் அரசின் ஓர் முக்கிய பிரிவு. இந்தத் தடையுத்தரவுகளை பொலிஸார் ஊடாக நீதிமன்றங்களில் அரசே பெற்றுக்கொண்டது. இது அனைவரும் அறிந்த உண்மை.

நினைவேந்தல் தடையுத்தரவுகளுக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நீதிமன்ற உத்தரவுகளில் ஜனாதிபதி தலையிடமாட்டார் என்று சாக்குப்போக்குக் கதைகள் கூறி அரச தரப்பினர் நழுவ முடியாது.

கடந்த ஆட்சியில் பல நினைவேந்தல் நிகழ்வுகளை நாம் சுதந்திரமாக நடத்தினோம். சில இடங்களில் தடையுத்தரவுகளை நீதிமன்றங்கள் ஊடாகப் பொலிஸார் கோரியபோதும் நீதிமன்றங்கள் எமது பக்கமே நின்றன. எமது நியாயமான கோரிக்கைகளை ஏற்றன.

ஆனால், இந்த ஆட்சியில் அனைத்து நடவடிக்கைகளும் அரசின் தலையீடுகளுடன் நடக்கின்றமை வெளிப்படை. ஏனெனில் கடந்த ஆட்சியில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்காத நீதிமன்றங்கள் இந்த ஆட்சியில் ஏன் தடை விதிக்கின்றன என்ற கேள்விகள் எம்மிடம் எழுந்துள்ளன.

எனவே, நீதி அமைச்சர் இந்த விவகாரத்தில் நேரடியாகத் தலையிட அதிகாரம் இருக்கின்றது. அதற்கு மேல் மனிதாபிமான ரீதியில் ஜனாதிபதி நினைத்தாலும் நினைவேந்தல் தடையுத்தரவுகளை நீக்க முடியும், என்றார். (ஒ,5,22)

## திலீபனை...

வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு இப்போது பயங்கரவாதச் சாயம் பூசப்படுகின்றது. தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு ஆட்சியிலிருப்பவர்கள் எப்போதும் தூக்கும் ஆயுதம்தான் 'பயங்கரவாதம்'. 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ் மக்கள் தியாக தீபம் திலீபனை பொது வெளியில், யாரும் இடையூறின்றி, நல்லிணக்கத்துக்கு குந்தக மில்லாமல் நினைவுகூர்ந்து வந்தனர். 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொலிஸார் இதற்கு நீதிமன்றம் ஊடாகத் தடை கோரிய போதும் அதற்கு மன்று மறுப்புத் தெரிவித்திருந்தது.

இப்போது ராஜபக்சக்களின் யுகம். தமிழர்களை மிதித்து அடிமைகளாக வைத்திருப்பது அவர்களின் நோக்கம். அதற்காக எதுவும் செய்வார்கள். நினைவுகூரல் என்பது எங்களின் மரபுரிமை சார்ந்தது. அதனைச் செய்வதற்குக் கூட அவர்களின் அனுமதியில் நாங்கள் தங்கியிருக்கவேண்டியிருக்கின்றது.

**பொதுமன்னிப்பு**

இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கைச்சாத்திடப்பட்டது. ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி அந்த உடன்பாட்டுக்கு அமைவாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை பலாலி இராணுவ முகாமில் வைத்து, இந்திய, இலங்கை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அப்போது இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த ஜெனரல் சேபால ஆட்டிக, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பிரதிநிதியாக இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தார். சகல போராளிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கடிதத்தை, அந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் ஆயுதக் கையளிப்பில் பங்கேற்றிருந்த யோகியிடம் அவர் வழங்கியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட பின்னர், அந்த அமைப்பிலிருந்த உறுப்பினர்களுக்கு இலங்கை அரசு பொதுமன்னிப்பு வழங்கிய பின்னரே, தியாக தீபம் திலீபன் தனது உணவு ஒறுப்புப் போராட்டத்தை 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்தார். அவரது 5 அம்சக் கோரிக்கைகளில் தனி நாட்டை வலியுறுத்தும் எவையும் இடம்பெறவில்லை. இவ்வாறான நிலையில் அவர் செப்ரெம்பர் 26ஆம் திகதி வீரச்சாவடைந்தார்.

இப்படியான நிலையில் தியாக தீபம் திலீபனை அரசு எவ்வாறு பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர் என்று முத்திரை குத்த முடியும். அவரை நினைவுகூர்வதை பயங்கரவாதச் செயற்பாடு என்று, பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் செயற்பாடு என்று எப்படிக் கூறமுடியும். இன்று ராஜபக்ச அரசில் அமைச்சராக இருக்கும் வாசுதேவ நாணயக்கார, தியாக தீபம் திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் பங்கேற்றிருந்த போது நேரில் வந்து பார்வையிட்டிருந்தார்.

திலீபனை நினைவுகூர்வது ஒருபோதும் பயங்கரவாதமாகாது. அரசு அதை உணர்ந்து கொள்ளவேண்டும். வெறுமனே தமிழர்களை வஞ்சிப்பதற்காகவே 'பயங்கரவாத' கோசத்தை ராஜபக்ச அரசு தூக்கிப் பிடிக்கின்றது என்பதை சர்வதேச சமூகம் உள்ளிட்ட சகலரும் உய்த்தறிந்து உணர்ந்து கொள்ளவேண்டும்.

**ஒற்றுமை**

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு அரசு விதித்த தடையால், தமிழர் தாயகத்தில் மிகப் பெரிய மாற்றம் நடந்தேறியிருக்கின்றது. தமிழ்த் தேசியத்தை உயிர்நாடியாகக் கொண்ட அனைத்துக் கட்சிகளும் ஓர் புள்ளியில் இணைந்துள்ளன. ஆயுதப் போராட்டத்தின் பின்னரான தமிழரசியலில் பிரிவுகளால் தமிழ் மக்கள் வெந்து வெதும்பி வெறுத்துபோயிருந்த சூழலில், இந்த ஒற்றுமை என்பது புதியதொரு ஒளிக்கீற்றாய் பிரகாசிக்கத் தொடங்கியிருக்கின்றது. இந்த ஒற்றுமை இன்னமும் வலுப்படவேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்புக்களை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் இதயத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். இந்த ஒற்றுமைக்கு வேட்டு வைப்பதற்கு, கட்சிகளைப் பிளவுபடுத்தி அதில் வெற்றிகாணும் தென்னிலங்கை அரசியல் தரப்புக்களின் எடுபிடிகள் முயற்சிகளை முன்னெடுப்பார்கள். தமிழ் கட்சிகள் அவதானமாகச் செயற்படவேண்டும்.

**அரசே பொறுப்பு**

தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையைக் கண்டு ராஜபக்ச அரசு மிரண்டு போயுள்ளது. அதனால்தான் அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய, நினைவேந்தலுக்கான தடையை அரசு விதிக்கவில்லை. அங்குள்ள நீதிமன்றங்களே விதித்துள்ளன என்று கூறுகின்றார். அவர் ஒன்றை விளங்கிக் கொள்ளவேண்டும். நீதிமன்றங்களில் நினைவேந்தலுக்கான தடையைக் கோரியது பொலிஸார், அவர்கள் அரசின் ஓர் அங்கம். பொலிஸார் ஊடாக நீதிமன்றங்களில் தடை உத்தரவுகளைப் பெற்றுவிட்டு, அதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க ஹெகலிய முற்படக் கூடாது, என்றுள்ளது. (ஒ,5)

## தடையை...

தெரிவிக்கின்றன. தடையை அடுத்து கிளம்பியுள்ள எதிர்ப்புக்களை அடுத்தே அரசு இந்த முடிவை நோக்கி நகர்கின்றது என்றும் தெரியவருகின்றது.

தியாகி திலீபனின் நினைவேந்தல் வாரம் தற்போது கடைப்பிடிக்கப்பட்டுவரும் நிலையில், நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு பொலிஸார் நீதிமன்றம் ஊடாகத் தடை உத்தரவைப் பெற்றுள்ளனர். நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்வோர் கைது செய்யப்படுவார்கள் என்று பொலிஸார் எச்சரித்திருந்த நிலையில், நினைவேந்தல் நிகழ்வு மேற்கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதேநேரம், இந்தத் தடை தமிழ் மக்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தத் தடைக்கு எதிராக ஒன்றிணைந்த தமிழ் தேசியக் கட்சிகள் இது தொடர்பாக ஜனாதிபதிக்கும், பிரதம ருக்கும் கடிதம் அனுப்பியுள்ளன. நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்காவிட்டால் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடவும் அவை தீர்மானித்துள்ளன.

நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடையால் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அரசுக்குக் கடும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளது. இந்த எதிர்ப்புக்கள் எதிர்காலத்தில் அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தலாம் என்பதால் தடையை நீக்குவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருகின்றது என்று அறிய முடிகின்றது. நீதி மன்றத்தின் ஊடாவே இந்தத் தடையை நீக்குவது தொடர்பாகவும் அரசு சிந்தித்து வருகின்றது என்று உள்ளகத் தகவல்கள் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (எ,ஒ)

## திலீபன்...

கருத்துத் தெரிவித்துள்ளார், ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார். 'யார் இந்த திலீபன்? இவன் சாதித்தது என்ன? தமிழ் மக்களுக்கு இவன் எவற்றை கொடுத்து விட்டான்? அரசியலுக்காக இவர்களை எல்லாம் தியாகிகள் ஆக்கிக் கொள்ள பார்க்கிறார்கள். திலீபன் ஏன் கொல்லப்பட்டான், அவனது சுயரூபம் என்ன, எத்தனை பேரை அவன் கொன்றான், ஏனைய அமைப்புக்களை சேர்ந்த எத்தனை பேரை அவன் கொன்றான் என்பதையெல்லாம் தெரியாமல் பேசக்கூடாது. சகோதர படுகொலைகளில் ஈடுபட்டவன். இலங்கை அரசு கொன்று குவித்ததை விட, இவர்கள் செய்த கொலைகள் ஏராளம். இவ்வாறான நபர்களை எதற்காக நினைவுகூர வேண்டும்? இதில் அவருக்கு தியாகிப்பட்டம் வேறு. நடந்து முடிந்த விடயங்களை விடுவோம். புலிகள் யாரும் தியாகம் செய்யவில்லை. கந்தன் கருணையில் கொல்லப்பட்ட தமிழர்களுடன் திலீபனுக்கு தொடர்பில்லையா? இந்த கொலைகளின் பின்னணியில் இருந்தவர்களிற்கு தியாகி பட்டம் தேவையா?, என்றெல்லாம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு ராஜபக்ச அரசு தடைவிதித்துள்ள நிலையில், தமிழ் மக்கள் கொதித்துப் போயுள்ள சூழலில் இவ்வாறனதொரு கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். (ஒ,இ)

## கடற்றொழிலுக்குச்

வீடு திரும்பவில்லை என்று அவருடைய மனைவி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இரணைப்பாலையைச் சேர்ந்த லோ. பால்ராஜ் (வயது -35) என்பவரே கடந்த 10ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்றுள்ள நிலையில் காணாமல் போயுள்ளார். மூன்று நாள்கள் கடலில் தங்கி நின்று தொழில் செய்துவிட்டு திரும்புவதாக கூறி சென்ற கணவர் இன்று வரையில் மீண்டும் திரும்பவில்லை என்று அவரது மனைவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். காணாமல் போனதாகக் கூறப்படும் நபர் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைதாகி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், முறைப்பாடு தொடர்பில் பல கோணங்களிலும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

காணாமல் போனதாகக் கூறப்படும் நபர் கடற்றொழில் சங்கங்கள் எதிலும் பதிவு செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ஒ,5,19)

### ஒன்றரை மாத...

குழந்தையும் அதனது பெற்றோரும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

சாமில பிரசாத் (வயது - 35) அவரது மனைவியான அச்சலா ஏகநாயக்க (வயது - 32) ஆகியோரும், அவர்களது ஒன்றரை மாதக் குழந்தையுமே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் அதிகாலை 5 மணிக்கு நடைபெற்ற சில நிமிடங்களிலேயே மீட்புப் பணியாளர்கள் அங்கு விரைந்தனர். அவர்கள் காயங்களுடன் குழந்தையை மீட்டு கண்டி மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனாலும் குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டிருந்த சாமில மற்றும் அச்சலா ஆகியோர் சடலங்களாக நேற்று மதியம் மீட்கப்பட்டனர். அச்சலா சட்டத்தரணி அவரது கணவர் சாமில அந்தப் பிரதேசத்தில் ஹோட்டல் நடத்தி வருபவர்.

கட்டடத்தின் நுழைவாயில் பகுதியை தவிர, மிகுதி அனைத்துப் பகுதிகளும் இடிந்து விழுந்து விட்டது.

இதேவேளை கட்டடம் இடிந்து விழும் அறிகுறிகள் தென்பட்டதையடுத்து, அதிகாலை 3 மணிக்கே அந்தக் கட்டடத்தின் உரிமையாளர் தனது மனைவி, இரண்டு பிள்ளைகளுடன் அங்கிருந்து வெளியேறி விட்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கட்டடம் இடிந்து அருகிலிருந்த இரண்டு வீடுகளின் மீது விழுந்துள்ளது. அதில் அயல் வீடொன்றில் வசித்த சாமில மற்றும் அச்சலா அவர்களது குழந்தையும் உயிரிழந்துள்ளனர்.

அச்சலா ஏகநாயக்கரின் தாயார் ஜெயந்தி ஏகநாயக்க தெரிவித்ததாவது:

நான் மருமகனின் ஹோட்டலில் பணிபுரியும் இளைய மகளுடன் ஒரு அறையில் தூங்கிக் கொண்டிருந்தேன். அடுத்த அறையில் மகள், கணவன், பிள்ளை தூங்கிக் கொண்டிருந்தனர். அதிகாலை ஐந்து மணியளவில் ஒரு பெரிய சத்தம் வந்தது. எதுவும் தெரியவில்லை. அறையின் சுவர்கள் உடைக்கப்பட்டு மூடப்பட்டேன். இருட்டில் எதுவும் தோன்றவில்லை. மெதுவாக தடவி படுக்கையின் அருகே தொலைபேசியைப் எடுத்தேன். அங்கிருந்தபடியே 119 ஐ அழைத்து சொன்னேன். சிறிது நேரத்தில், பொலிசார் வந்தனர். ஒரு குழு எம்மை கயிறு மூலம் மீட்டனர். எமக்கு முன்பாக இருந்த மகள், மருமகன், குழந்தை இருந்த அறை முற்றாக இடிந்திருந்தது, என்றார். (ஒ.இ)

### கண்டி...

நடுக்கமும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாமென பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறை மூத்த பேராசிரியர் அதுல சேனரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடிந்து விழுந்த கட்டடத்தின் தரை தளம் கசிந்துள்ளதாகவும், பாறைத் தளத்திலுள்ள மண் அடுக்கு தளர்த்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்ததாகவும் தெரிவித்தார்.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பு கண்டியில் ஏற்பட்ட நில அதிர்வும், தற்போது கண்டி பகுதியில் நிலவும் பலத்த மழையும் இதற்கு காரணமாக இருக்கலாமென்றார். மழை காரணமாக, மண் அடுக்குக்குள் நீர் புகுந்துள்ளதாகவும், பாறைக்கும் கட்டட அடித்தளத்திற்குமிடையில் இந்த மண் அடுக்கு உள்ளதாகவும் கூறினார். இருப்பினும், புவியியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டடத்தின் அஸ்திவாரம் பாறையுடன் நங்கூரமிட்டிருந்தால் இதுபோன்ற விபத்து நடந்திருக்காது என்றும், புவியியல் ஆய்வு இல்லாமல் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டுமானம் மேற்கொள்ளப்பட்ட கட்டடமாக இது இருக்கலாமென்றும் தெரிவித்தார். சரிவுகளில் வீடுகளை நிர்மாணிக்கும்போது, புவியியல் ஆய்வை மேற்கொள்ள வேண்டும் மற்றும் புவியியலாளரின் பரிந்துரையின் பேரில் ஒரு கட்டடம் கட்டப்பட வேண்டும். இந்த பரிந்துரைகளின்படி, 10 முதல் 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டடங்களின் கட்டுமானம் நடக்கவில்லை என்றார்.

இத்தகைய விபத்துகளைத் தடுக்க, சரிவுகளில் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் மற்றும் பொறியியலாளர்களால் உடனடியாக பரிசோதிக்கப்பட்டு அவை சரியான தரத்தில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

இதேவேளை, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், கட்டடம் இடிந்து விழுந்தமைக்கு நில அதிர்வு காரணமல்ல என மறுத்துள்ளது. மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் எஸ்.ரணசிங்க இதை தெரிவித்தார். நில அதிர்வு உணரப்பட்ட பகுதிகளுக்கும் கட்டடம் இடிந்து விழுந்த பகுதிக்குமிடையில் பெரிய இடைவெளியுள்ளதாக தெரிவித்தார். (ஒ.ப)

### தமிழ்க் கட்சிகளின்...

ரீதியில் போராட முடிவு செய்துள்ள தமிழ்க் கட்சிகள் அனைத்துக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன். இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில், கருத்து வேறுபாடுகளையும் கௌரவத்தையும் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, அவற்றையெல்லாம் புறந்தள்ளி, பொதுவான சிந்தனைக்குள் வேற்றுமையில் இவர்கள் ஒற்றுமை கண்டிருப்பது, தமிழின வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்த ஒற்றுமையானது தொடர வேண்டும் என்பதிலும், உரிமைப் பிரச்சினைகள் மாத்திரமின்றி, சிறுபான்மை மக்களின் நலன் சார்ந்த விடயங்களுக்கும் தீர்வு தர வேண்டும்.

இவர்களைப் பின்பற்றி, முஸ்லிம் கட்சிகளும் சமூகப் பிரச்சினைகளை வென்றெடுப்பதற்காக ஒருமித்துச் செயற்படுவதே காலத்தின் தேவையாகும்.

தேசிய ஐக்கிய முன்னணியானது, சிறுபான்மைக் கட்சிகளை ஒன்றுபடுத்துவதற்கு பல தடவை முயற்சித்தது. ஆகக் குறைந்தது முஸ்லிம் கட்சிகளையாவது ஒன்றுபடச் செய்ய மேற்கொண்ட முயற்சிகள் தவிடுபொடியாகின. தலைமைத்துவங்களின் தலைக்கனங்களும் கௌரவப் பிரச்சினைகளுமே இந்தச் சமூகத்தின் சாபக்கேடாகியுள்ளன.

பொதுத்தேர்தலில் எதிரணியில் நின்று வெற்றிபெற்றவர்கள், இப்போது சமூகம் தொடர்பில் எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாது ஆளுங்கட்சியில் தாவப் பார்க்கின்றனர். எனவே, முஸ்லிம் கட்சிகள் தமது நலன்களுக்கு அப்பால் சமூகத்துக்காக உழைக்க வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது, என்றார். (ஒ.5,22)

# மரண அறிவித்தல்

## லயன் P.K.பாலசிங்கம் பாலஸங்கர்

**(முகாமைத்துவ உதவியாளர்-பிரதேச செயலகம்-உடுவில், முன்னாள் தலைவர், லயன்ஸ் கழகம்-நல்லூர்)**



இல.718, "சங்கரியார் வளவு", சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லயன் P.K பாலசிங்கம் பாலஸங்கர் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், உடுவில்). நேற்று (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற P.K பாலசிங்கம் "படியாதவன்" (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்- விஞ்ஞானம்) மற்றும் சிவபதிமலர் தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் சந்திராதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரபாலினியின் (உதவி முகாமையாளர், SLT Jaffna) பாசமிகு கணவரும், பாலரிஷாந் (பழைய மாணவன்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2017 A/L, HND in Quantity Surveying), பாலசிவானுஜன் (பழைய மாணவன்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2019 A/L), பாலசுஜித் (மாணவன்- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-தரம் 09) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலமயூரனின் (கனடா) அன்புச் சகோதரனும், சோபனாவின் அன்பு மைத்துனரும், கௌசிக், அஸ்வின் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற குமாரகுலசிங்கம்-தவமணி, செல்வி யோகேஸ்வரி (ஓய்வு நிலை பிரதி அதிபர்-யாழ் இந்து மகளிர் கல்லூரி), ராஜேஸ்வரி (ஓய்வுநிலை பிரதி அதிபர், முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா)- சுந்தரநடராஜன் (ஓய்வுநிலை அதிபர்), ரத்தினேஸ்வரி (ஓய்வுநிலை உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-உடுவில்)- காலஞ்சென்ற ஜெயபாலன் ஆகியோரின் பெறாமகனும், தயாளினி, மகேந்திரராஜா (சுவிஸ்), சாலினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயந்தன் (அதிபர்-வசாவிளான் மத்திய கல்லூரி), ரகுபதி, வளர்மதி (சுவிஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்ற சிவஞானகுரு- புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் காந்திமதி, காலஞ்சென்ற சிவபாலன் (சிறாப்பர்) மற்றும் கனகமணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2020) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பித்து முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 222 3118, 071 430 4761
00141 68244581 (சகோதரன்-கனடா)

தகவல்: பிரபாலினி (மனைவி)
பாலரிஷாந் (மகன்), பாலசிவானுஜன் (மகன்), பாலசுஜித் (மகன்),
பாலமயூரன் (தம்பி)



# அரைஇறுதிக்குள் ஜோகோவிச்

ரோம், செப்.21
இத்தாலி பகிரங்க ரென்னிஸ் போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச், ஜேர்மனிய வீரர் டொமினிக் கோப்பெரை தோற்கடித்து அரைஇறுதிக்கு முன்னேறினார். இந்தப் போட்டி ரோமில் நடந்து வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த கால்இறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் முதன்மை வீரர் நோவக் ஜோகோவிச் (சேர்பியா) 6:3, 4:6, 6:3 என்ற செட்கணக்கில் டொமினிக் கோப்பெரை (ஜேர்மனி) போராடித் தோற்கடித்து அரைஇறுதிக்கு முன்னேறினார். பெண்கள் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருஜா 3:6, 6:3, 6:4 என்ற செட் கணக்கில் அஸரென்காவை (பெலாரஸ்) வீழ்த்தி அரை இறுதியை எட்டினார். (ற)



## உடற்பயிற்சி நிலையம் கள்ளப்பாட்டில் திறப்பு

முல்லைத்தீவு, செப்.21
முல்லைத்தீவு கள்ளப்பாட்டில், மறைந்த உடற்பயிற்சி ஆசிரியர் சாண்டோ துரைரட்ணம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட உடற்பயிற்சி நிலையம் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. சிவலிங்கம் பிறேம்சிங் என்பவரின் ஏற்பாட்டில் இந்த நிலையம் அமைக்கப்பட்டது.
இந்த உடற்பயிற்சி நிலையத்தை, உடற்பயிற்சி ஆசிரியரான சாண்டோ செல்வக்கதிரமலை செல்வராசா திறந்து வைத்தார்.
இதனை அமைப்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்த சிவலிங்கம் பிரேம்சிங் என்பவர், உடற்பயிற்சி ஆசிரியர் சாண்டோ செல்வக்கதிரமலை செல்வராசாவினால் கௌரவிக்கப்பட்டார்.
இந்த நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், உடற்பயிற்சி ஆசிரியர் செல்வக்கதிரமலை செல்வராசா மற்றும் தமிழர்களின் பாரம்பரிய சிலம்புக் கலைப் பயிற்றுநர்களான சின்னத்துரை குமாரசுவாமி, வேலுப்பிள்ளை பரமேந்திரம் ஆகியோருடன், உடற்பயிற்சி ஆசிரியர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற-246)

## யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியன்

கரணவாய், செப்.21
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட மேசைப்பந்தாட்டத்தின் இறுதியாட்டத்தில் ஆண்கள், பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியனானது.
இதன் இறுதியாட்டம் மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியும், கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின. இதில் யாழ்ப்பாண மாவட்ட அணி 3:0 என்ற கணக்கில் வென்று சம்பியனானது. மூன்றாமிடத்தை மன்னார் மாவட்ட அணி பெற்றுக் கொண்டது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில், யாழ்ப்பாண மாவட்ட அணியும், கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 3:2 என்ற கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட அணி வெற்றி பெற்று சம்பியனானது. மூன்றாமிடத்தை மன்னார் மாவட்ட அணி பெற்றது. (ற-இ)



## தாயகம் கழகத்தை பதிவு செய்ய மறுப்பு

வவுனியா,செப்.21
வவுனியா கால்பந்துச் சங்கம், தாயகம் கால்பந்துக் கழகத்தைப் பதிவு செய்ய மறுப்புத் தெரிவித்துள்ளதாக தாயகம் விளையாட்டுகழகத்தினர் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் மோசடியான முறையில் ஏமாற்றும் விதமாக செயற்படும் கழகங்களை தாம் பதிவுசெய்து கொள்ள முடியாது என்று வவுனியா மாவட்ட கால்பந்து சங்கம் தெரிவித்துள்ளது.
இந்த விடயம் தொடர்பில், தாயகம் கால்பந்துக் கழகம் தெரிவிக்கையில்,
வவுனியா கால்பந்து கழகத்தில் கழகங்களைப் பதிவு செய்வதற்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி இறுதித் திகதி இடப்பட்டு எமக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. கால்பந்து கழகத்தினால் 20 ஆம் திகதி எனத் திகதி இடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதம் எமக்கு 24 ஆம் திகதி கிடைக்கப் பெற்றிருந்தது.
எனினும் பதிவுசெய்வதற்காக 14 நாள் தவணையில் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் எம்மை பதிவு செய்யவிடாதவகையில் இந்தக் கடிதம் காலதாமதமாக அனுப்பப்பட்டிருந்த நிலையில் நாம் மேன் முறையீடு செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 30 ஆம் திகதிக்குப் பின்னர் வவுனியா மாவட்ட கால்பந்துச் சங்கத்திலிருந்து தாயகம் கால்பந்துக் கழகம் வெளியேற்றப்பட்டதாக அறிகின்றோம் எனத் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் வவுனியா கால்பந்துச் சங்கத்தின் தலைவர் அ. நாகராஜன் தெரிவித்ததாவது,
இந்தக் கழகம் நாம் தெரிவித்த காலப்பகுதிக்குள் தமது பதிவுகளை மேற்கொள்வதற்கான ஆவணங்களை சமர்ப்பித்திருக்கவில்லை. சங்கம் என்ற ரீதியில் நாம் எமது யாப்பு விதிகளின் பிரகாரமே செயற்படமுடியும். ஒவ்வொரு கழகத்துக்கும் ஒவ்வொரு நெகிழ்வுப் போக்கை கையாளமுடியாது. தாயகம் கழகம் கடந்த மாதம் 30 ஆம் திகதி தமது விண்ணப்பப் படிவத்தைப் பதிவுத்தபாலில் அனுப்பியதாக தெரிவித்துள்ளது. கடந்த மாதம் 30 ஆம் திகதி ஒரு ஞாயிற்றுக்கிழமை தினமாகும். ஞாயிற்றுக்கிழமைகளில் தபால் நிலையம் திறந்துள்ளதாக அவர்கள் போலியாக தெரிவித்து எமது சங்கத்தையும் தபால் திணைக்களத்தையும் தவறாகவும் மோசடியாகவும் பயன்படுத்தியுள்ளனர்- என்றார். (ற-110)



வேலை வாய்ப்பு
அரச அங்கீகாரம் பெற்ற (PVT. LTD) கம்பெனியில் பல வெற்றிடங்கள் உள்ளன.
தொடர்பு: 077 408 8241
077 132 8912

கணபதி துணை
வணிகக்கல்வி BUSINESS STUDIES
மாபெரும் விசேட இறுதிக்கருத்தரங்கு
A/L - 2020
23, 26, 28, 29, 30.09.2020
மதியம்: 2.00 - 5.30 வரை
ஆசிரியர்:
சக்திவடிவேல் பிரதீபன்
(HNDA.M.COM.PGDE)
Note:
• பழைய புதிய பாடத்திட்டம் உள்ளடக்கப்படும்
• புதிய மாதிரி வினாத்தாள் கலந்துரையாடப்படும்
• கையேடுகள் வழங்கப்படும்
• வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
சுகாதார விதிமுறைகளின்படி கலந்துகொள்ளவும்.
இடம்:
பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 602 7511, 076 216 1532



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.